# மாயை பற்றிய தத்துவக்கதைகள்

தமிழறிஞர்

# நூல் விபரம்
****************************

- நூலின் பெயர் :- மாயை பற்றிய தத்துவக்கதைகள்
- நூலாசிரியர் :- கே. வி. குணசேகரம்
- பதிப்பாண்டு :- 2010
- மொத்தப் பக்கங்கள் :-
- விநியோகம் :-

- விலை :-

# என்னுரை

மாயையும் பிரம்மமும் முறையே, ஓடும் பாம்பையும், சலனமற்றுக்கிடக்கும் பாம்பையும் ஒக்கும். இயங்கும் சக்தி மாயையாகும்; நிலையான சக்தி பிரம்மம். இவ்வாறு மாயையைப் பற்றி இராமகிருஷ்ணபரமகம்சர் கூறியுள்ளார்.

“மாயை போலியானது, உண்மையற்றது, ஏமாற்றுவது” என்று இருக்கு வேதம் கூறுகின்றது.

“பல்வேறு வகைப்பட்ட தோற்றங்களைத் தோற்றுவிக்கும் ஆற்றல் கொண்டது மாயை” என்று அதர்வண வேதம் கூறுகிறது.

உபநிடதங்களும் மாயையைப் பற்றி விரிவாகக் கூறுகின்றன; “பிரபஞ்சத்தின் தோற்றத்திற்குக் காரணம் மாயை” என்று சுவேதாஸ்வர உபநிடதம் கூறுகின்றது.

உலகப் படைப்புக்கு மாயை முதற்காரணமாகவும், சக்தி துணைக்காரணமாகவும், சிவன் நிமிர்த்த காரணமாகவும் இருக்கின்றான்” எனப் புராணங்கள் கூறுகின்றன.

"மா" என்றால் தோன்றல். "யா" என்றால் ஒடுங்கல் என்று மாயைக்குப் பொருள் சொல்லப்படுகின்றது.

ஆன்மாவும் மாயையும் சேர்ந்தால் எப்பொழுதும் துன்பமே உண்டாகும். இதனால் தான் பிறப்புக்கள் உண்டாகின்றன.

ஆன்மாவும் பிரம்மமும் சேர்ந்தால் பேரின்பம் உண்டாகும். இதனால் பிறப்பற்ற நிலை உண்டாகும்.

எப்பொருள் மீதாவது ஆசையுள்ளவன் மாயையால் பீடிக்கப்பட்டவனாவான். உதாரணமாகப் பணத்தின் மீது ஆசை; உணவின் மீது ஆசை; பெண்ணின் மீது ஆசை. இவ்வாசை உள்ளவர்கள் எல்லோரும் மாயையின் வசப்பட்டவர்கள் என்று வியாசமுனிவர் கூறியுள்ளார்.

மாயை இரு வகைப்படும். உலகை உயிர்ப்பிப்பதும் மாயை தான்; உலகை துன்பப்படுத்துவதும் மாயை தான். உலக உய்விக்கும் மாயையை "வித்தை" என்றும், உலகைத் துன்பப்படுத்தும் மாயையை அவித்தை என்றும் கூறப்படுகிறது.

ஈஸ்வரனிடம் வித்தை, அவித்தை என்ற இரு மாயைகளும் உள்ளன. வித்தியா மாயை உயிர்களை இறைவனோடு சேர்த்துவைக்கும். அவித்தியா மாயை உயிர்களுக்குப் போகங்களைக் கொடுத்து அவைகளை இறைவனை விட்டு நீங்கச் செய்யும்.

மாயை தான் பிரம்மத்தைக் காணச்செய்கின்றது. மாயை இல்லாவிட்டால் உலகம் இயங்காது;. உயிர்களால்

இறைவனின் மகிமைகளை அறிந்து கொள்ள முடியாது. பிரம்மஞானம், பரமானந்தம், பேரின்பம், முத்தி முதலியவைகளெல்லாம் மாயையின் மூலமே உயிர்களுக்குக் கிடைக்கின்றன. இவ்வாறு இந்து சாஸ்த்திரநூல்கள் கூறுகின்றன.

அப்படியான வல்லமை பொருந்திய மாயையின் குணங்களைப் பற்றிய தத்துவங்களை இந்நூலில் கதைகளாக எழுதியுள்ளேன்.

“பொதுவாக இந்து சாஸ்திர நூல்களை விளங்கிக்கொள்வது கடினமானது. திரும்பத் திரும்பப் படித்து அதன் உட்பொருளை விளங்கி அதற்கு விளக்கங்களும் கதைகளும் எழுதிவரும் திரு. கே. வி. குணசேகரம் அவர்கள் இந்து தத்துவ நூல்கள் அனைத்தையும் உதாரணமாகச் சிவஞானபோதம், திருவருட்பயன் போன்ற நூல்களை இலகுபடுத்த வேண்டும்”. என்று யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியின் அதிபர் திரு. வீ. கணேசராஜா அவர்கள் எனது மணிவிழாவிற்குத் தலைமை தாங்கியபோது கேட்டுக்கொண்டார். மணிவிழாவிற்கு வருகை தந்திருந்த ஆயிரத்திற்கு மேற்பட்ட அறிஞர்களுக்கு மதிய உணவைத் தனது செலவில் அளித்தபோதே இதைக் கேட்டுக்கொண்டார். அவரது விருப்பத்திற்கமைய அவர் கூறிய இரண்டு நூல்களுக்கும் உரையும், விளக்கமும், கதையும் எழுதி முடித்துவிட்டேன். அவை அடுத்து வெளிவரும்.

வழமைபோல தனது அங்குஷத்தைத் தந்து, எனக்குத் தத்துவத்தைச் சொல்லி, தனது அங்குஷத்தால் என்னை எழுதவைக்கும் நாவலர் ஸ்ரீவித்தியா மகாகணபதி வேறும் பல இந்து தத்துவ நூல்களுக்குக் கருவைத் தருவார் என்ற நம்பிக்கை எனக்குண்டு. இதுபோன்ற தத்துவக் கதைகளைத் தொடர்ந்து பாகம் பாகமாக எழுதிவெளியிட எண்ணியுள்ளேன்.

வழமையாக எனது நூல்களில் எழுத்துப் பிழைகளை நீக்கிச் சீர் செய்துதரும் ஆசிரியை செல்வி இறைமகள் பரநிரூபசிங்கத்திற்கும் ஓய்வு பெற்ற அதிபாகளான, திரு. தி.கிருஸ்ணகுமார் அவர்களுக்கும், திரு.வா. ஜெயரத்தினம் அவர்களுக்கும், இந்நூலைக் கணனி மயப்படுத்திய செல்வி. க.தேனமிர்தம் அவர்களுக்கும், இந்நூலை வெளியிடும் கொழும்பு 12இல் அமைந்துள்ள லங்கா பதிப்பக உரிமையாளர் திரு. கந்தசாமி இராஜேந்திரன் அவர்களுக்கும் நன்றி கூறிக்கொள்கின்றேன். மீண்டும் சந்திப்போம்.

நன்றி.

பிள்ளையார் கோயிலடி, அன்புடன்
கோப்பாய் மத்தி, கே. வி. குணசேகரம்.
கோப்பாய். ஓய்வு பெற்ற கோட்டக் கல்விப்பணிப்பாளர்.

# அணிந்துரை

சைவசித்தாந்தம் உலகப்பொருட்கள் அனைத்தையும் பதி(இறை), பசு(உயிர்), பாசம்(தளை) எனும் மூன்று பொருள்களில் அமைத்துக் கொள்கின்றது. இவை யாவும் நித்தியமானவை. அவற்றில் பாசமானது ஆணவம், கன்மம், மாயை எனும் மும்மலங்களைக் கொண்டது. இம்மும்மலங்களில் ஒன்றாகிய மாயை சைவசித்தாந்த தத்துவத்தில் சிறப்பான இடத்தைப் பெற்றிருக்கிறது. “மாயை” என்ற சொல்லானது அதன் தொழிலை அடிப்படையாகக் கொண்டமைந்தது. அதாவது, மாய் - அழித்தல், ஐ – ஆக்குதல் என்பதாம்.

உலகம் தோன்றுவதும், அழிவதும் ஆகிய இரு நிலைகளும் மாயையின் காரணமாகவே நடைபெறுகிறது. எனவே, மாயையானது உலகத்தின் தோற்றம், இருப்பு, அழிவு ஆகிய மூன்று நிலைகளின் அடிப்படையாக விளங்குகின்றது. இவ்வாறு உலகமாகிய காரியத்திற்கு "மாயை" முதற்காரணமாக அமைவதுடன் மூலமாகிய ஆவணத்துடன் சேர்ந்தும், கன்ம மலத்தின் துணையோடும் செயலாற்றுகிறது என்கிறது சைவசித்தாந்தம்.

இத்தகைய சிறப்புக்கொண்ட மாயையைப் பற்றி எளிமையாகவும் அனைவரும் விளங்கிக்கொள்ளக் கூடியவகையிலும் "மாயை பற்றிய தத்துவக்கதைகள்" எனும் இந்நூலை திரு. கே.வி. குணசேகரம் அவர்கள் எழுதியுள்ளமை சிறப்பாகும். சைவசித்தாந்தமானது இலகுவில் எல்லோராலும் புரிந்து கொள்ளக்கூடியதன்று. ஆனால் ஆசிரியரவர்கள் இந்நூலில் கடினமான தத்துவக் கருத்துக்களையெல்லாம் கதை வடிவில் அமைந்துள்ளமையினால் பெரியோர் மட்டுமல்லாது சிறுவர்களும் புரிந்து கொள்ளக்கூடியதாக இந்நூல் விளங்குகின்றது. இத்தகைய சிறப்பான உத்தியைக் கையாண்ட நூலாசிரியர் திரு.கே.வி.குணசேகரம் அவர்களை நான் மனமாரப் பாராட்டுகின்றேன்.

பெரியோர் மட்டுமன்றி மாணவர்களும், இளைஞர்களும் சைவசித்தாந்தத்தை, குறிப்பாக மாயை பற்றி எளிமையாக அறிந்து கொள்ளும் வகையில் அளவில் சிறியதாக இந்நூல் அமைக்கப்பெற்றுள்ளமை சிறப்பானதாகும்.

இவ் அரிய நூலை அனைவரும் படித்துப் பயனடைவார்கள் என்பதில் ஐயமில்லை.

இன்றைய காலத்தின் அவசியத் தேவையாக இருக்கின்ற சமய அறிவு பற்றிய அடிப்படையானதும், தெளிவானதுமான கருத்து ஞானத்தின் தொகுப்பாக வெளியிடப்படுகின்ற இந்நூல் சிறந்த ஓர் படைப்பாகும். இவ் அரிய பணியைச் செய்த ஆசிரியரைப் பாராட்டுகின்றேன். மேலும், இது போன்ற சிறந்த முயற்சிகளை அவர் மேற்கொள்ள வேண்டும் எனவும் மனமார வாழ்த்துகின்றேன்.

சாந்தி நாவுக்கரசன்.
பணிப்பாளர்,
இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களம்.
கொழும்பு – 04.

## 01)

கடம்பவனம் என்ற காட்டில் நமசிவாயம் என்ற ஞானி பன்னசாலை அமைத்து ஞானம் பெறுவதற்காகத் தனது சீடர்களுடன் தங்கியிருந்தார்.

அந்தக் காட்டின் வழியாகச் செல்பவர்கள் ஞானியின் பன்னசாலையில் வந்து தங்கியிருந்து உணவருந்திச் செல்வது வழக்கம்.

அக்காட்டின் வழியாக வணிகர்கள் பொருட்களைக் கொண்டு செல்லும் போது நமசிவாயம் சுவாமிக்குப் பொருட்களைக் கொடுப்பார்கள்.

அவ்வூர் அரசன் வேட்டையாடக் காட்டிற்கு வந்தால் பல நாட்கள் அவருடன் தங்கியிருந்து அவரது உபதேசங்களைக் கேட்பான்.

அன்று அவன் வந்த போது கேட்டான்; "சுவாமி, மாயை மாயை என்கிறார்கள். மாயையென்றால் என்ன?"

"எவையெவையெல்லாம் மனிதனின் தர்ம சிந்தனைகளை மறைக்கின்றனவோ அவையவையெல்லாம் மாயைகள். பெண்ணாசை, பொன்னாசை, மண்ணாசை என்பன மனிதனின் ஆன்மீகத் தன்மையை மறைக்கின்றன. இவை மனிதர்களின் மனங்களில் ஆசைகளைத் தூண்டி அவாவடையச் செய்யும். எண்ணெய் வைத்திருந்த குடத்தை எப்படித்தான் சுத்தம் செய்தாலும் எண்ணெய் வாசனை அதில் இருப்பது போல ஆத்மாவை இறைவன் பால் வைத்தவர்களிடத்தும் பற்றுக்கள் இருக்கும். உலகில் வாழ்பவர்களிற் பலர் இவற்றிற்கு அடிமையாகிவிடுகிறார்கள். பாரமுள்ள பக்கம் சாயும் தராசைப்போல ஆசையுள்ள பக்கமே மனம் சாயும். கடவுளின் மேல் ஆசையிருந்தால் கடவுளின் பக்கம் மனம் சாயும். தராசைப்போல ஒரு சிறிதளவு பாரம் கூடினாலும் அப்பக்கமே மனம் சாயும். தராசுத்தட்டில் குண்டுமணியளவு பாரம் கூட இருந்தாலும் அந்தப் பக்கம் தான் தராசு சாயும். அது போலவே மேற்சொல்லப்பட்ட ஆசைகள் சிறிதளவு மனதில் இருந்தாலும்

அது அதையே நாடும். ஆசை வளர்வது. நினைக்கு முன் அது மனம் முழுவதையும் பற்றிப் பிடித்துத் தன் வசப்படுத்திவிடும். ஆசைகள் தான் மாயை. ஆசைகள் தர்மங்களை ஒரு நொடியில் மறைத்துவிடும். தர்ம சிந்தனை மறைக்கப்பட்டால் பழிபாவங்கள் எதுவும் தெரியாது. பழிபாவங்களைத் தர்மம் என்று எண்ணும் மனதில் ஈஸ்வர சிந்தனை இராது. சமைக்கின்ற இடத்தில் இருப்பவனுக்கு அதன் வாசனையால் நாவூறும். வயிறார உண்டுவிட்டு இருந்தாலும் அதன் வாசனையால் அதில் ஆசை உண்டாகும். அதுபோல உலகில் வாழும் மனிதர்களின் மனதில் அளவுக்கதிகமான ஈஸ்வர சிந்தனை இருந்தாலும் அவனுக்கு ஆசைகள் உண்டாகும். இந்த ஆசை தான் மாயை. இந்த மாயையை விலக்கினால் தான் மனிதர்கள் பரிபூரணர்களாவர்''.

''குருவே, ஆசைகளை எப்படித்தான் விலக்கினாலும் அது மனதைத் தீவிரமாகத் தாக்குகிறது. அரண்மனையை விட்டு வெளியே வந்தவுடனேயே எனக்கு பட்டத்தரசியின் ஞாபகம் வந்துவிடுகிறது. இதை என்னால் தவிர்க்கமுடியவில்லை'' என்றான் அரசன்.

''காமம் மிகுந்தவன் பெண்ணின் காலடியே தஞ்சம் என்றிருக்கின்றான். காமம் உலகில் உள்ள அனைத்தையும் மறைக்கும் கொடிய மாயையாகும். தர்மசிந்தனையை வளர்க்க விரும்புவோர் பெண்ணாசை, பொன்னாசை, மண்ணாசையின்றி வாழவேண்டும். ஆசைகளுள் பெண்ணாசை கொடியது. பெண்ணாசை தர்ம சிந்தனைகள்

எதையும் மனதில் எழவிடாது. பெண்ணாசை சிறிதாக மனதில் இருந்தாலும் அது ஓட்டைக் குடத்தில் இருந்து நீர் வெளியேறுவது போலத் தர்ம சிந்தனைகள் முழுவதையும் அகற்றிவிடும். காமம் உணவோடு தொட்டுக்கொள்ளும் ஊறுகாயைப் போல இருக்க வேண்டுமே தவிர உணவாக இருக்கக்கூடாது. உணவாக இருந்தால் அது எல்லாப் பாவங்களையும் செய்யவைக்கும்.''

``உண்மை தான் சுவாமி, இதைத் தடுப்பது எப்படி?'' என்று கேட்டான் அரசன்.

``நினைக்காமல் விடுவது தான் மறப்பதற்கு வழி. உனது தாயை நினை; உனது நாட்டை நினை; உனது நாட்டில் வாழும் மக்களை நினை; நாட்டை முன்னேற்ற நினை; மக்களை மகிழ்வுடன் வாழவைக்க நினை. இப்படித் தர்மமானவற்றை நினைத்தால் தீயவை மனதில் வராது. இதற்கு வைராக்கியம் வேண்டும். வைராக்கியம் வருவதற்குக் கடவுளின் அருள் வேண்டும். கடவுளை இடையறாது நினை. இப்படியான நினைவுகள் உனது மனதில் இருந்தால் உனது மனைவியின் நினைவு உனக்கு வராது. எதில் ஆசை கூடுகிறதோ அதை அடைய மனம் விரும்பும். உனது ஆசை நாட்டைப் பற்றியதாக இருந்தால் உனது மனைவியின் நினைவு வந்தால் கூட அதனால் உனக்குப் பாதிப்புக்கள் உண்டாகாது. மண்ணாசை கொண்டவன் தன் வாழ்நாள் முழுவதும் மண்ணாசையால் போராடி நிம்மதியிழந்து வாழ்க்கையை அனுபவிக்காது துன்பப்பட்டு மண்ணுக்கிரையாகிறான். பெண்ணாசை பிடித்தவன்

தனது பொருட்கள் முழுவதையும் பெண்ணின் காலடியில் கொட்டி நோயாளியாகி நிம்மதியிழந்து துன்பப்பட்டு இறந்து போகிறான். பொன்னாசை கொண்டவன் பொன்னைச் சேகரிப்பதில் இன்பங்கொண்டு அதைச் செலவு செய்யாது பௌத்திரப்படுத்தித் துன்பமாக வாழ்ந்து இறக்கிறான். இவர்கள் தேடிய சொத்துக்கள் யாவும் இவர்களுக்கோ, இவர்களது குடும்பத்தினருக்கோ சேராது அந்நியருக்கே சேரும். இதனால் இவர்களது வம்சமே துன்பப்படும். அறவானது சொத்துத் தேவைப்படும் போதெல்லாம் அவனது உதவும். அதைவிட அச்சொத்து அவனது வம்சத்தையும் காப்பாற்றும்'' என்றார் சுவாமி.

``சுவாமி, மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசையால் தான் துன்பங்களென்றால் அரசனான நான் அதைத் துறக்கலாமா?'' என்று கேட்டான் மன்னன்.

``மண்ணையும் மக்களையும் காப்பாற்றுபவன் மன்னன். அவன் அவற்றைப் பற்றில்லாமல் அனுபவித்துக்கொண்டு நாட்டையாளவேண்டும். கொடிய மிருகங்களை வைத்து வித்தைகாட்டுவோர் அவற்றை அடக்கி வைத்திருப்பதைப் போல மன்னனும் கொடிய விலங்குகளான காமம், குரோதம் முதலியவற்றை அடக்கி வைத்திருத்தல் வேண்டும். மனதை அடக்கக் கற்றுக்கொண்டவனுக்கு மாயையால் ஆபத்து ஏற்படமாட்டாது. மன்னனின் பொருள் மக்கள். அதனால் தேவைக்கதிகமாகச் சேமிக்காது மக்களின் நலனுக்காகச் செலவு செய். மண்ணைப் பிடிக்கப் போர்

செய்யாதே. உள்ள மண்ணை விருத்தி செய். பெண்களை உனது சகோதரிகளாக நினை. இவ்வாறு நடந்தால் மனம் ஒருபோதும் குழம்பாது''.

''மன்னா, நகரிலிருந்து மூன்று குடியானவர்கள் எனது ஆச்சிரமத்திற்கு அடிக்கடி வந்து போவார்கள். பலகாலமாக அவர்கள் இங்கு வரவில்லை. ஒரு நாள் கோயிலுக்குச் சென்றேன். கோயில் வீதியில் நின்ற வேப்பமர நிழலில் ஒருவன் காவியுடை தரித்து அமர்ந்திருந்தான். அவனைச் சுற்றி ஏராளமான மக்கள் நின்றார்கள். அவனின் சீடர்கள் ஒவ்வொருவரிடமும் பணம் பெற்றுக்கொண்டு அவனைச் சந்திக்கவிட்டனர். அவன் அவர்களின் எதிர்காலத்தைப் பற்றிச் சொல்லிக்கொண்டிருந்தான். ஏராளமான பணம் கிடைத்தமையால் அவனது குணம் மாறிவிட்டது. அடுத்தவன் உடல் முழுக்கப் புண்களுடன் அக்கோயிலில் பிச்சை எடுத்துக்கொண்டிருந்தான். என்னைக்கண்டதும், சுவாமி; ''பெண்ணாசையால் என்னை நோய் பற்றிப்பிடித்துவிட்டது'' என்றான். அடுத்தவனின் இரண்டு கைகளையும் காணவில்லை. அவன்; ''சுவாமி மண்ணுக்கு ஆசைப்பட்டமையால் எதிரிகள் எனது கைகளைத் துண்டித்துவிட்டார்கள்'' என்றான். ஒருவனது செல்வம், செல்வாக்கு, பெயர், கீர்ததி, தகுதி யாவும் இவ்வாசைகளால் கெட்டுப்போகும்.''

''சுவாமி மாயையை அறிந்துகொள்வது எப்படி?'' மன்னன் கேட்டான்.

“ஆசைதான் மாயையின் வடிவம். ஆசைப்படுபவர்கள் எல்லோரும் மாயையின் பிடிக்குட்பட்டவரே. ஒருவனை மயக்குவதும் மாயை, அவனை உய்விப்பதும் மாயை. மனிதனையும், இறைவனையும் பிரிப்பது ஆசை. ஆசையில்லாதவன் இறைவனோடு இரண்டறக்கலந்து விடுவான். ஆசையுள்ளவன் இறைவனை நினைக்கமாட்டான். இறைவனை நினைக்க மாயையான ஆசைகள் விடாது”.

“உலகத்தைப் பார். பெரிய வணிகனான பரஞ்சோதி என்பவனின் மூன்று கப்பல்கள் பலத்த காற்றினால் கடலுட் தாண்டுவிட்டன. பொருள் இருந்தால் தான் துன்பம் என்று நினைத்த பரஞ்சோதி துறவியாகி என்னுடன் இருக்கிறான். பணம் என்ற மாயை அகன்றதால் அவன் துறவியாகிவிட்டான். பெண்களிடம் சென்று வந்த வாதவூரன் தான் செல்லும் பெண் இன்னொருவனுடன் தொடர்புகொண்டிருப்பதைக் கண்டு எனது சீடனாகிவிட்டான். ஆசைகள் தான் மாயை என்றுணர்ந்தவன் மாயையை விலக்கிவிடுவான். அனைத்தும் துன்பங்களே என்று உணருபவன் தான் மாயையை விலக்குவான். இதனால் மாயை தான் மனிதனை இறைவனோடு சேர்க்கிறது. மனிதனுக்கு ஆசையை உண்டாக்கும் மாயை அவித்தை மாயையாகும். மனிதனை இறைவனோடு சேர்ப்பது வித்தியா மாயையாகும். மனிதனை ஆசைப்படச் செய்வது அவித்தை என்ற மாயை. மனிதனின் ஆசைகளை அறுப்பது வித்தியா என்ற மாயை. ஆசைகொள்ள வைத்தல், அவாக்கொள்ளச் செய்தல், கோபங்கொள்ள

வைத்தல், பொறாமைப்பட வைத்தல் என்பன அவித்தை மாயையின் செயல்களாகும். ஞானம் பெற எண்ணல், பக்திகொள்ளல், வைராக்கியத்தை உண்டுபண்ணல், ஈஸ்வர சிந்தனையை உருவாக்குதல், அநீதியான செயல்களுக்கு அஞ்சுதல் போன்ற தன்மைகளை உண்டு பண்ணுவது வித்தியா மாயையின் செயல்களாகும். இவற்றைக் கொண்டு மாயையின் தன்மைகளை நீ அறிந்துகொள்ளலாம்'' என்றார் நமசிவாயம் சுவாமிகள்.

''சுவாமி, அகங்காரம் தான் அனைத்திற்கும் காரணி என்று கேள்விப்பட்டிருக்கிறேன். அகங்காரமும் மாயையின் வடிவம் தானே?'' என்று கேட்டான் அரசன்.

''ஆசைகளை எப்பாடுபட்டாவது தீர்த்துவிட வேண்டும் என்று முடிவெடுத்தலே அகங்காரமாகும். தர்மத்தை மறைப்பது அகங்காரமே. ''நான்'' என்பது மறைந்தாலொழிய அகங்காரம் நீங்காது. அகங்காரம் நீங்காவிட்டால் மரணமும் பிறப்பும் தொடர்ந்து கொண்டே இருக்கும். நான் அழிந்தால் மாயையும் அழியும். புகழை அடைய விரும்புபவர்களும் மாயையால் பீடிக்கப்பட்டவர்களேயாவர். மன்னா, வேலூர் என்ற நாட்டில் பரமசிவதேசிகர் என்ற ஓர் அறிஞர் இருந்தார். அவர் வடமொழியில் பாண்டித்தியம் பெற்றவர். அதனால் வேலூர் அரசன் அவரைத் தனது அரசசபை அறிஞராக நியமித்திருந்தான். ஒரு நாள் ஒரு வணிகன் அரசசபைக்கு வந்து அரசனைப் பணிந்து அவன் காட்டிய ஆசனத்தில் அமர்ந்தான். அவன் சேனாதிபதிகளையும் முதலமைச்சரையும்

மதித்துப் பணிந்தான். பரமசிவதேசிகரை அவன் கண்டுகொள்ளவில்லை. அது பரமசிவதேசிகருக்குச் சினத்தை உண்டாக்கியது. அவனைப் பழிவாங்க நினைத்தார். வணிகன் அரசனுடன் தனது வர்த்தகம் சம்பந்தமாகப் பேசிவிட்டு எழுந்தான். அப்பொழுது அரசன்; "மணிமாறா, இன்னும் சற்று நேரத்தில் கவிதைப்போட்டி நடைபெறவுள்ளது. அதைக்கேட்டுவிட்டுப்போ. நமது பேரறிஞர் பரமசிவதேசிகர் தலைமை தாங்குகிறார்" என்றான".

"அரசே, வேலையில்லாதவர்கள் தான் இப்படியான போட்டிகளில் கலந்துகொள்வார்கள். மன்னர் கலைஞர்களின் வாழ்வு வளம்பெற நிதி கொடுத்தல் வேண்டும். அது போல வணிகர்களும் கொடுத்தல் வேண்டும். எனது வீட்டிற்குப் பலபுலவர்கள் வருவார்கள். நான் நிதியும், பொருளும் கொடுப்பேன். ஏழை எளியவர்களுக்கும், கோயில்களுக்கும் நிதி கொடுப்பதற்காக நான் உழைத்தல் வேண்டும்" என்று கூறிவிட்டுச் சென்றுவிட்டான்".

"வணிகன் அரசனின் நண்பனாகையால் அரசன் அதைப் பெரிதாக எடுக்கவில்லை. ஆனால் சபையில் அந்த வணிகன் வேலையற்றவர்கள் தான் இப்படியான போட்டியில் கலந்துகொள்வார்கள் என்று சொன்னது பரமசிவதேசிகருக்குப் பிடிக்கவில்லை".

"சபை கலைந்த பின் சபையில் இருந்த பல புலவர்கள் பரமசிவதேசிகரைச் சந்தித்து வணிகனின் செருக்கை

அடக்கவேண்டுமென்றுகூறித் தேசிகருக்கு இல்லாதவற்றை எல்லாம் கூறினர்’’.

‘‘தேசிகர் வணிகனைப் பழிவாங்க நினைத்தார். அதற்கான தருணத்தை எதிர்பார்த்திருந்தார். அன்று மன்னனின் திருமணநாள். வணிகன் காலையில் வந்து தனது நண்பனான அரசனைச் சந்தித்து வாழ்த்தி அரசனுக்கும் அரசிக்கும் பெறுமதி மிக்க வைரநகைகளைப் பரிசளித்துவிட்டுச் சென்றான்’’.

‘‘பரமசிவதேசிகர் சபைதொடங்கும் நேரம் வந்தார். மக்களும் புலவர்களும் மகிழ்வுடன் அவரை வரவேற்றுப் புகழ்ந்தனர். அப்போது கவியரங்கம் தொடங்கியது. அரசன் பட்டத்தரசியின் விருப்பத்திற்கமைய வெளியே செல்லப் புறப்பட்டான்’’.

பரமசிவதேசிகர் மன்னனிடம் ஓடிவந்து; ‘‘அரசே, இன்று தங்களின் திருமண நாள். அதனால் புலவர்கள் தங்கள் புகழைப்பாட வந்துள்ளனர். நான் ஓர் அருமையான கவிதை எழுதியுள்ளேன்…’’ என்று தேசிகர் முடிக்குமுன் அரசன் சொன்னான்; ‘‘மணிமாறன் கூறியது போல வேலை இல்லாத நேரங்களில் தான் கவிதைகளை இரசிக்கலாம்…’’ என்று சிரித்தவாறு கூறிவிட்டுச் சென்று விட்டான்’’.

‘‘தேசிகருக்கு அவமானமாக இருந்தது. மன்னன் கூறியதைக்கேட்டுச் சபை பலமாகப் பல நிமிட நேரம் சிரித்தது’’.

“தேசிகரின் முகவாட்டத்தைப் புரிந்துகொண்ட குதிரைப்படைத் தளபதி குமரேசன் தேசிகரை நாடிவந்து சொன்னான்; “தேசிகரே, எந்தப் பெரிய புலவர் நீர். உம்மை அவமதிப்பது தமிழை அவமதிப்பதற்குச் சமம். இப்போ மன்னருக்கென்ன அவசர வேலை. மணிமாறனுடன் தான் எங்கோ செல்லப்போகிறார். அதைவிட அரசனின் வார்த்தைகளைப் பார்க்கும் போது இனிச் சபையில் கவிதைகள் அரங்கேறாது போலத்தெரிகிறது. மொழிப்பற்றும், கலையுணர்வும் இல்லாத மணிமாறனோடு சேர்ந்தால் எப்படி இருக்கும்?” என்றான்”.

“தேசிகரின் உடல் எரிந்தது. அன்றிரவு தேசிகரும் குமரேசனும் இரகசியமாகச் சந்தித்துக் கொண்டனர்”.

“தேசிகரே, உமது அறிவென்ன? ஞானமென்ன?, அதை எழுத்தே தெரியாத மணிமாறன் பரிகசித்ததை என்னால் தாங்கிக்கொள்ளமுடியவில்லை. அவனுக்கு ஒரு பாடம் கற்பிக்க வேண்டும்” உறுமினான் குமரேசன்.

“தேசிகருக்கு மகிழ்ச்சியாக இருந்தது; “மணிமாறனுக்கு மட்டுமல்ல மன்னருக்கும் பாடம் புகட்ட வேண்டும். புகழ்பெற்ற கலைஞர்களை அவமதித்தால் பெருங்கேடுவருமென்பதை உணர்த்துதல் வேண்டும்” என்றார் தேசிகர்”.

“தனது திட்டத்தை நிறைவேற்றத் தகுந்த ஒருவர் கிடைத்ததை நினைத்து மகிழ்ந்தான் குமரேசன்”.

“அதன் பின் இருவரும் அடிக்கடி சந்தித்தனர். அவர்களது சந்திப்பை அறிந்த மன்னன் அவர்களை ஆராய ஒற்றர்களை நியமித்தான்”.

“சில தினங்களின் பின் மன்னரைக் கொல்லச் சதி செய்தனர் என்று இருவரும் கைது செய்யப்பட்டு சிரச்சேதம் செய்யப்பட்டனர். புகழால் ஏற்பட்ட அகங்காரமே தேசிகரின் உயிருக்கு உலை வைத்தது” என்றார் நமசிவாயம் சுவாமிகள்.

“சுவாமி, அகங்காரத்தைப் போல வேறு எவையெவை மாயையாகி வந்து மனிதனைக் கெடுப்பவை?” என்று கேட்டான் மன்னன்.

“கல்வி, ஞானம், அறிவு, பணம் இப்படி மனிதன் எவையெவையில் ஆசைகொள்கின்றானோ அவையெல்லாம் மனிதனைச் தர்மசிந்தனைகளிலிருந்து அன்னியப்படுத்தும் கல்வியாளர்கள் தாம் தாம் அறிஞர்களென்றும், தம்மை விட வேறு எவருக்கும் அறிவு இல்லையென்றும் கருதுவார்கள். இதனால் அவர்கள் அறிஞர்களிடமிருந்தும், மக்களிடமிருந்தும் அன்னியப்படுத்தப்படுவார்கள். அறிவு என்பதற்கு வரைவிலக்கணம் கூறுவது கடினம். அத்துடன் ஒரு துறையில் அறிவுள்ளவனுக்கு மற்றத்துறைகள் தெரியாது. அவன் தான் அறிந்த துறையைப் பற்றியும் பூரணமாக அறிந்துகொள்வதில்லை. நாம் சந்திக்கும் ஒவ்வொரு உயிரின் நடத்தையையும் கூர்ந்து அவதானித்தால் பல அனுபவங்களைப் பெறமுடியும். பல துறைகளைச் சார்ந்த அறிஞர்கள் பலர் ஒன்று

சேர்ந்து கடற் சுற்றுலா ஒன்றை மேற்கொண்டனர். மிகவும் பெரியதொரு கப்பலை ஒழுங்கு செய்து புறப்பட்டனர்''.

''கப்பலில் சகல வசதிகளும் இருந்தன. எல்லோரும் மிகவும் குதூகலமாக ஆடிப்பாடியபடி சென்றனர்''.

''கப்பலில் சில சிப்பந்திகள் வேலை செய்தனர். அவர்களைக் கப்பலில் சென்றோர் தமது வேலைகளைச் செய்யும் கூலிகளாகவே கருதினார். அதனால் அவர்கள் வேலை செய்பவர்களை மதிக்கவில்லை''.

''நடுக்கடலில் கப்பல் சென்ற போது பலத்த காற்று வீசத் தொடங்கியது. அது சிறிது நேரத்தில் சூறாவளியாக மாறியது. கப்பலில் பொருத்தப்பட்டிருந்த இயந்திரங்கள் பழுதடைந்தன. கப்பல் காற்றின் வேகத்திற்குத் தாக்குப் பிடிக்காது பலதிசைகளிலும் செல்லத் தொடங்கியது''.

''பயணம் செய்தவர்கள் மிகவும் பயந்தனர். ஆனால் கப்பலில் வேலை செய்வோர் குதூகலத்துடன் இருந்தனர்''.

''உங்களுக்குப் பயமில்லையா...?'' தத்துவப் பேராசிரியர் கேட்டார்''.

''வாழ்க்கை நிலையில்லாதது. உடம்பில் எங்கோ ஒளித்திருக்கும் உயிர் யாருக்கும் தெரியாமலேயே போய்விடும். இது தெரியாத மக்களெல்லாம் வாழ்க்கை நிலையானது என்கிறார்கள்'' என்று கூறிக்கொண்டு வந்தீர்கள். எப்போது போவதென்று தெரியாத உயிர் இப்போதே போகட்டுமே.

நிலையில்லாத வாழ்க்கையை நிலையானதென்று நினைப்பவர்கள் மடையர்கள்'' என்றான் அந்த ஊழியன்''.

''நடுநடுங்கினார் விஞ்ஞானி. ''நான் எனது ஆராய்ச்சியின் மூலம் பல புதுமைகளைச் செய்துள்ளேன். விஞ்ஞானிகள் ஆராய்ச்சியின் மூலம் வானவெளியில் உலாவுகிறார்கள். ஓரிரு மணித்தியாலங்களில் உலகையே வலம் வந்துவிடுகிறார்கள். பிறப்பிலும் புதுமைகள் செய்கிறார்கள். அவர்களால் முடியாதது எதுவுமில்லை'' என்று சொன்னீர்கள். இப்பொழுது இந்தப் புயலை நிறுத்துங்கள் பார்ப்போம் என்றான் இன்னொருவன்''.

''மற்றவன் பொறியியலாளரைப் பார்த்துக் கேட்டான்; ''ஐயா, நீங்கள் புதிய பல இயந்திரங்களைச் செய்து மக்களின் பாவனைக்கு விட்டதாகச் சொன்னீர்கள். இப்பொழுது பழுதடைந்த இந்தக் கப்பலின் இயந்திரங்களைத் திருத்துங்கள்''.

''கற்றவர்கள் எல்லோரும் தாம் தாம் அறிவானவர்கள், உயர்ந்தவர்கள் என்று நினைத்துக் கர்வப்படுகிறார்கள். ஆனால் அவர்களுக்கு எதுவும் தெரியாது. தத்துவத்தைக் கற்றவர் அதன் உண்மையான நிலையைப் புரிந்து கொண்டால் அவர் சஞ்சலப்படாது இருந்து மற்றவர்களைத் தைரியப்படுத்தியிருப்பார். கற்றவர்களில் பெரும்பாலனவர்கள் தம்மறிவின் மூலம் மற்றவர்களை ஏமாற்றித் தாம் வாழநினைக்கிறார்கள். சாஸ்திர ஞானம் வாழ்விற்கு உதவாதென்று நினைக்கிறார்கள். அதனால் தான் அவர்கள்

பாமரரை விடக் கீழானவர்களாகிறார்கள். நாம் பெரிதாகப் படிக்கவில்லை. ஆனால் இயற்கையைப் புரிந்து வைத்திருக்கின்றோம். அதனால் நாம் பெரும் ஆபத்தான சூழ்நிலைகளிலும் கடவுளின் மேலுள்ள நம்பிக்கையினால் மகிழ்வுடன் இருக்கின்றோம். வடக்கே மேகம் கறுத்திருப்பதும், வடக்கிலிருந்து காற்று வீசுவதும் ஆபத்தைத்தராது. பலமாகக் காற்று வீசியதால் மேலெழும்பிய நீர் இயந்திரத்துள் சென்றுவிட்டது. அதைத் திருத்தும் வேலையில் ஈடுபட்டிருக்கிறோம். இன்னும் சிறிது நேரத்தில் சரியாகிவிடும் என்றான் ஒருவன்''.

''விஞ்ஞானிக்குப் பயமாக இருந்தது. எனினும் தான் பெரிய விஞ்ஞானி என்று கதைத்துவிட்டேன். இந்த ஊழியனிடம் நிலைமையைப் பற்றிக் கேட்டால் அவன் என்னைக் குறைவாக நினைப்பான்'' என்று நினைத்தார்''.

''அறிஞர்களே பயப்படாதீர்கள். காற்றின் வேகம் குறைந்துகொண்டு வருகின்றது. அதனால் ஓரிரு மணி நேரத்துள் காற்று நின்றுவிடும். அத்துடன் மேற்குவானம் வெளித்துக்கொண்டு வருகின்றது. மேற்கு வெளுத்தால் ஆபத்தில்லை'' என்றான் ஒருவன்''.

''வானியல் நிபுணர் இதுவரை கிரகங்களைப் பற்றியும் நட்சத்திரங்களைப் பற்றியும் கதைத்துக் கொண்டிருந்தவர். அவர் அவனைப் பார்த்துக் கேட்டார்; ''வானிலையைப் பற்றி நீ படித்தாயா?''

“எனக்கு எழுத வாசிக்கத் தெரியாது ஐயா. இந்த வேலையில் சேர்ந்த பின்பு என்னுடன் வேலை செய்யும் மூத்தவர்களிடம் கேட்டுத் தெரிந்து கொண்டேன். ஒவ்வொரு மனிதர்களும் தாம் தாம் செய்யும் தொழிலைப் பற்றி முழுமையாக அறிந்து கொள்ளல் வேண்டும். இதை விட உலக வாழ்விற்குத் தேவையானவற்றையும் கற்றுக்கொள்ளல் வேண்டும். பொதுவாக மனிதர்கள் எல்லோரும் நீச்சல் கற்றுக்கொள்ளல் வேண்டும். நீச்சல் உடலுக்கு நல்ல பயிற்சி. எழுத்தறிவில்லாத மிருகங்களுக்குக் கூடப் பயிற்சியளித்து நுட்பமான வேலைகளைச் செய்விக்கலாம். எரிமலை, நில நடுக்கம் போன்றன நிகழும் பகுதிகளில் உள்ள விலங்குகள் அதை முன்கூட்டியே அறிந்து வெளியேறிவிடுகின்றன. இன்று காற்று வீசும் என்று எமக்குத் தெரியும்…” கதைத்துக் கொண்டிருக்கும் அவனை ஆச்சரியத்துடன் பார்த்தனர் அவ்வறிஞர்கள்”.

“அவன் அவர்களைக் கவனிக்காது கதைத்துக் கொண்டிருந்தான்; “கடல் என்றுமில்லாதவாறு அமைதியாக இருந்தது. கடலுள் மீனினங்களைக் காணவில்லை. பறவைகள் எவையும் இரைதேடி கடலுக்குள் இறங்கவில்லை. அதனால் நாம் காற்றை எதிர்பார்த்து அதற்கான முன்னாயத்தங்களுடன் தான் வந்தோம்” என்று கூறிவிட்டு நிறுத்தியவன் சில நிமிடங்களின் பின் கேட்டான்; “உங்களுக்கு நீந்தத் தெரியுமா…? அவர்கள் எதுவும் பேசாததால் அவனே தொடர்ந்து சொன்னான்; “மிருகங்களுக்கும், பறவைகளுக்கும் நீந்தத்

தெரியும். நீந்துவது பெரிய வேலையல்ல. எவ்வளவோ படித்த நீங்கள் சிறிது பயிற்சியெடுத்திருந்தால் பழகியிருக்கலாம். தற்செயலாகக் கப்பல் கவிழ்ந்தால் நாமெல்லோரும் நீந்தித் தப்பிவிடுவோம். அறிஞர்களான நீங்கள் இறந்துவிடுவீர்கள். அதனால் நாட்டிற்கும் உங்கள் குடும்பத்தினருக்கும் பெரும் துன்பமேற்படும்'' என்றான் அவன்''.

''மன்னா, ஆசைகள் உள்ளவர்களுக்கும், அகங்காரம் உள்ளவர்களுக்கும் மெய்யறிவு உண்டாகாது. அதுபோல உலகப் பற்றுக்களால் பந்தப்பட்ட மனமுடையவர்களுக்கு மெய்ஞானம் உண்டாகாது. மனத்தைப் பரிசுத்தமாக்கும் அறிவு தான் மெய்யறிவு. மெய்யறிவின் மூலம் மெய்ஞானம் உண்டாகும். கற்றவர்களுக்குத் தாம் கற்றவற்றில் நல்ல பரிட்சயம் இருக்கலாம். அதனால் அவற்றைத் திரும்பத் திரும்பத் சொல்வதால் எந்தப் பிரயோசனமும் ஏற்படாது. கற்றவற்றை அனுபவத்திற்குக் கொண்டு வந்து கற்றபடி நடத்தல் வேண்டும். அப்படியில்லாத அறிவால் பயனோ ஞானமோ வராது. கற்றவர்கள் மற்றவர்களைக் கவரும்படியாகப் பேசுவார்கள்; நம்பும்படியாகப் பேசுவார்கள்; உண்மை நிலையை உணரும்படி பேசுவார்கள். ஆனால் அவர்கள் பேசுபவற்றை அனுபவித்தறிந்து கைக்கொள்வதில்லை. அப்படியான உபதேசங்களால் பயனில்லை.''

''காட்டு வழியாக ஒரு குழுவினர் பயங்காரணமாக ''சிவாயநம, நமசிவாய'' என்று பலமாக

உச்சரித்துக் கொண்டு சென்றனர். அவர்களின் முன் சிங்கம் ஒன்று வந்துவிட்டது. அவர்கள் எல்லோரும் சிவனின் நாமத்தை மறந்தனர். “ஐயோ சிங்கம் தப்பி ஓடுங்கள்” என்று சிலரும்; “பயப்படாதீர்கள் கையில் அகப்பட்டவற்றை எடுத்துத் தாக்குங்கள்” என்று சிலரும் கூச்சலிட்டனர். தமக்கு மிருகங்களால் ஆபத்துக்கள் வரக்கூடாது என்று எண்ணிச் சிவனின் நாமத்தை உச்சரித்தவர்கள் ஆபத்து வந்ததும் அதை மறந்து தம்மில் நம்பிக்கை கொண்டனர். ஆபத்தான வேளைகளில் கடவுள் உதவுவார் என்ற சிந்தனை எவருக்கும் வரவில்லை. இது தான் மனிதனின் நிலை.”

“வாயால் கடவுளின் நாமங்களைச் சொல்வதால் நம்பிக்கைவராது. நம்பிக்கை வரவேண்டுமானால் கடவுளிடம் எம்மை ஒப்படைத்தல் வேண்டும். கடவுளின் கிருபையைப் பெறவேண்டுமானால் நாம் படித்தவற்றை நம்பவேண்டும்; கற்றபடி நடத்தல் வேண்டும். கல்விச் செருக்கும், செல்வச் செருக்கும் உள்ளவர்களுக்கு ஒருபோதும் மெய்யறிவு உண்டாகாது. மெய்யறிவு உண்டானவனுக்கு எதிலும் வேறுபாடு தெரியாது. நிறக்குருடு உள்ளவனுக்கு நிறங்களின் பேதம் தெரியாதது போல மெய்யறிவு உள்ளவனுக்கு உயர்வு தாழ்வு போன்ற பேதங்கள் தெரியாது. மெய்யறிவுள்ளவன் மெஞ்ஞானியாக இருப்பான்; அதனால் அவன் குருடனாக இருப்பான்; செவிடனாக இருப்பான்; அவன் ஊமையாகவும் இருப்பான். நெருப்பு நெருப்பு என்று ஆயிரம் தடவைகள்

சொன்னாலும் நெருப்புச் சுடாது. அதுபோல ஆயிரம் புத்தகங்களை வாசித்தாலும் மெய்யறிவு வராது''.

''ஒரு முறை தான் தான் பெரிய அறிஞன் என்று சொல்லிக்கொண்டிருப்பவன் என்னிடம் வந்தான். நான் பேசியவை எல்லாவற்றையும் தான் பல்வேறு நூல்களில் இருந்து அறிந்துகொண்டதாகக் கூறினான். மதங்கள் மாயையைப் பற்றிப் பல்வேறு விதமாகக் கூறுகின்றன. அறுவகைத் தரிசனங்கள் உள்ளன. இந்த அறு வகைத் தரிசனங்களும் மாயை பற்றிப் பல்வேறு விதமாகக் கூறுகின்றன. சாங்கிய தரிசனம் பிரபஞ்சத்தின் உற்பத்திக்கு மூலகாரணமாக இருப்பது பிரகிருதி என்று சொல்கிறது'' என்றேன். வந்தவன் அது பற்றித்தான் அறிந்துள்ளதாகக் கூறினான். அருகில் இருந்தவர்களுக்கு அவனைப் பற்றித் தெரியும். அதைக் கவனிக்காது நான் தொடர்ந்து சொன்னேன். 'பிரகிருதியைப் பற்றியும் உலக உற்பத்தியைப் பற்றியும் ''சாங்கிய காரிகை'' என்ற நூல் விபரமாகக் கூறுகிறது என்று சொல்லும் போது அவன் சொன்னான்; ''சாங்கிய காரிகையை நான் பலமுறை படித்துள்ளேன்''.

''அப்படியா? மிகவும் நன்று. சாங்கிய காரிகை என்ற நூலின் ஆசிரியர் யார்? என்று கேட்டேன் அவன் வாய் திறக்கவில்லை. மற்றவர்கள் அறிந்ததை விடத் தாம் கூடுதலாக அறிந்துள்ளோம் என்று எண்ணுபவர்களுக்கும் மெய்யறிவு உண்டாக மாட்டாது. இதுவும் மனிதனது முன்னேற்றத்தை மறைக்கும் மாயையாகும். இப்படியானவர்கள் தம்மைச்

சந்திப்போரிடமெல்லாம் தமது வித்துவத்தைப் பற்றி அளவுக்கதிகமாகக் கூறுவார்கள். மெய்யறிவு உள்ளவர்கள் நூல்கள் பலவற்றைக் கற்று அதன்படி நடந்த போதும் தமது வித்துவத்தன்மையைப் பற்றி வாய் திறந்து எதுவும் சொல்லமாட்டார்கள்''.

''கோழி ஒன்று தனது குஞ்சுகளுக்கு இரையைக் காட்டிவிட்டுச் சுற்றுச் சூழலை அவதானித்தது. காகம் ஒன்று பறந்து வந்து மரக்கொப்பில் இருந்தது. தாய்க்கோழி; ''அவதானமாக இரைதேடுங்கள்'' என்று சொல்லிவிட்டு காகத்தை அவதானித்தது. கோழி எச்சரிக்கையானதை அறிந்த காகம் குஞ்சுகளைப் பிடிக்க முடியாதென்று நினைத்துப் பறந்து போனது. அதன் பின் பருந்து ஒன்று பறந்து வந்து மரத்தில் இருந்தது. தாய்கோழி குஞ்சுகளைச் செடிக்குள் மறைந்திருக்கச் சொன்னது. அதன் பின் கழுகு ஒன்று வானில் வட்டமிட்டது. உடனே தாய்க்கோழி குஞ்சுகளை அழைத்துக்கொண்டு பற்றைக்குள் சென்று மறைந்தது. தன்னிலும் பார்க்கப் பலமில்லாதவன், தனது பலத்திற்குச் சமமாக இருப்பவனுடன் எச்சரிக்கையாக இருந்ததால் போதும். தன்னிலும் பலமுள்ளவனைக் கண்டால் ஒதுங்கிவிடவேண்டும். அது தான் மெய்யறிவுள்ளவனின் தன்மை''.

''சுவாமி, அப்படியானால் நூல்களின் பயன் என்ன? ''மன்னன் கேட்டான்.

''நூல்கள் யாவும் மனிதனது மேம்பாட்டிற்காகவே எழுதப்பெற்றன. சாஸ்த்திரங்கள் யாவும் இறைவனை

அடையவேண்டிய வழியைக் காட்டுகின்றன. ஒருமுறை அவற்றை விளங்கிக் கற்றுவிட்டால் மீண்டும் அதைக் கற்க வேண்டிய தேவையில்லை. பண்டிதர் பரந்தாமன் பல்வேறு வகையான நூல்களைக் கற்றவர். கற்ற படிதானும் வாழ்ந்து, மற்றவர்களையும் வாழும்படி உபதேசிக்கிறவர். இரண்டு பேர் வேலூருக்குச் செல்ல விரும்புகின்றனர். அவர்கள் அவ்வூருக்குச் சென்ற சிலரை அணுகி அவ்வூருக்குச் செல்லும் பாதையைப் பற்றி அறிகின்றனர். அவ்வூரைப்பற்றி அறிகின்றனர். அவர்களின் நடைமுறைகளைப் பற்றி அறிகின்றனர். அதன் பின் அவ்வூருக்குச் சென்று வந்தனர். அதன் பின் அவர்கள் அவ்வூருக்குச் செல்லவேண்டியவர்களுக்கு மட்டும் வழியைக் கூறுகின்றனர். இது போன்றது தான் நூல்களும். ஒருமுறை வாசித்து அதன் உட்பொருளை அறிந்தவன் அதன் பின் அந்நூலைத் திரும்பவும் வாசிக்கத்தேவையில்லை. அறிவில்லாதவன் தான் திரும்பத் திரும்ப வாசிப்பான். நூல்களின் பயன் அதன் பொருளிலேயே தங்கியுள்ளது. அதன் பொருளை விளங்கி அதன்படி நடப்பவன் தான் அறிவாளி. அவன் தான் மெய்மையான அறிவுள்ளவன்'' என்றார் சுவாமி.

``சுவாமி, மெய்யறிவு நூல்களைப் படிப்பதால் உண்டாகுமா? அல்லது நூல்களைப் படித்தவர்களிடம் கேட்பதினால் உண்டாகுமா?'' மன்னன் கேட்டான்.

``மன்னா, அறிவுள்ளவன் நூல்களைப் படித்தும் அறிவைப் பெறுவான். அதுபோல குருவிடம் கேட்டும் அறிவைப் பெறுவான். குருவிடம் கேட்டு விட்டு அவர் கூறியவற்றை

நூல்களில் படிப்பது சிறந்தது. பண்டிதர் பரந்தாமனிடம் பல மாணவர்கள் கற்று வந்தனர். ஆருரன் என்ற மாணவன் பண்டிதரிடம் கற்ற பின்பு பல நூல்களைத் தேடிக்கற்று வந்தான். ஒரு சொல்லுக்குப் பல கருத்துக்கள் உண்டு. அந்தக் கருத்து வேறுபட்டும் காணப்படும். உனது தந்தையின் காலத்தில் ஒரு அகங்காரமுள்ள பண்டிதன் சபைக்கு வந்து தன்னுடன் மெய்ப்பொருள் பற்றி வாதாடும்படி கேட்டான் அப்பொழுது சபையில் பண்டிதர் பரந்தாமனும் இருந்தார். வந்தவன் பேரறிஞன். வாதம் தொடங்கியதும் அவையில் உள்ள அறிஞர்களைத் தேவையில்லாமல் இகழ்ந்துகொண்டிருந்தான் அவன். பண்டிதர் பரரந்தாமனுக்கு வியர்த்தது. அவர் பயந்தமையால் தடுமாறிக்கொண்டிருந்தார். இதை ஆரூரன் கண்டுகொண்டான். வந்தவன்; ''உங்கள் நாட்டில் பெரும் அறிவாளியும், பேரறிஞன் என்றும் சொல்லிக்கொள்பவரான பண்டிதர் பரந்தாமன் ஏன் பேசாமலிருக்கிறார். அவர் பேசட்டும்'' என்றான். அப்பொழுது ஆரூரன் எழுந்து சொன்னான்; ''இது பற்றிப் பேச எமது குரு தேவையில்லை. அதோ அந்தக் குடியானவனே போதும். அவன் பண்டிதர் எமக்குக் கற்பிக்கும் போது தூர இருந்து கேட்பவன். அவன் கூறுவான்'' என்றான் ஆருரன்''.

''வந்தவன் சற்றுத்திடுக்கிட்டான். திரும்பி அந்தக் குடியானவனைப் பார்த்தான். அவன் நான்கு விரல்களையும் மடித்து வைத்துக்கொண்டு சுட்டுவிரலை உயர்த்திக் காட்டினான். வந்தவனுக்கு எதுவும் புரியவில்லை. இருப்பினும் புரியவில்லை

என்று சொன்னால் தன்னைக் கேவலமாக நினைப்பார்கள் என்று நினைத்தான். அப்பொழுது ஆரூரன்; விளக்கம் தரவேண்டுமா…?’’ என்று கேட்டான்; ‘‘வேண்டாம், வேண்டாம்’’ எனக்குப் புரிந்து விட்டது. பண்டிதர் மெய்யறிவுள்ளவர் என்பதைப் புரிந்துகொண்டேன்’’ என்றான்.’’

‘‘தர்க்கம் நடைபெற்றுக்கொண்டிருக்கும் போது பண்டிதரின் சீடனொருவனை ஆரூரன் அழைத்துச்சென்று மற்ற விரல்களை மடித்துக்கொண்டு சுட்டு விரலை உயர்த்திக்காட்டு. அவர் ஏதாவது சொன்னால் எதுவும் பேசாமல் விம்மி விம்மி அழு. நான் பார்த்துக்கொள்கிறேன்’’ என்று கூறினான். மன்னா, கேட்பது சுவையைத் தரும். கற்பது அறிவைத் தரும். அதனால் குருவிடம் கேட்டுவிட்டுக் கற்பது தான் சிறந்தது’’.

‘‘ஒரு போலிச் சந்யாசி மக்களை ஏமாற்றிப் பிழைத்து வந்தான். அவனது ஏமாற்று வார்த்தைகளை மக்கள் மறுபேச்சின்றி நம்பினர். அவனது சீடர்கள் பலர் உள்ளூரிலும் வெளியூர்களிலும் சென்று மக்கள் கூடுமிடங்களில் தமது குருவைப்பற்றிப் பெருமையாகக் கூறுவர். அதை மக்கள் நம்பி அவரது ஆச்சிரமத்திற்கு வருவார்கள். ஊரில் நடப்பவற்றை அவர்கள் அறிந்து வந்து குருவுக்குக் கூறுவார்கள். குரு அவர்கள் கூறியதைக் கூறுவார். அதனால் மக்களுக்கு நம்பிக்கை உண்டானது. ஒரு நாள் வேற்றூரிலுள்ள பெரிய தனவந்தன் ஒருவனின் புதல்வனுக்கு நாகம் தீண்டிவிட்டது. அவன் தமது மகனை வைத்தியரிடம் கொண்டு சென்றான். அவர்களுடன் வைத்தியரின் வீட்டிற்கு மக்கள் பலர் சென்றனர்.

அவர்களோடு போலிச்சாமியாரின் சீடர்கள் பரதேசிகளைப் போலச் சென்றனர். அவர்களுக்கு வைத்தியர் சொன்னவற்றை அவர்கள் கேட்டுக்கொண்டிருந்தனர். பின் அத்தனவந்தனை அணுகி தமது குருவைப்பற்றி புகழ்ந்து கூறினர்; "ஐயா, நாவலூரில் அருணாசலம் என்றொரு சுவாமியார் இருக்கிறார். அவர் முக்காலமும் உணர்ந்தவர். அவரைச் சென்று தரிசியுங்கள். எல்லாம் நல்லபடி முடியும். சென்றவாரம் மரத்தால் விழுந்த ஒருவனை அழைத்துக்கொண்டு சுவாமியிடம் வந்தனர். சுவாமி மந்திரித்துத் திருநீறு கொடுத்ததும் அவனுக்குச் சுகமாகிவிட்டது" என்றனர்".

"அதனை நம்பிய அந்தத்தனவந்தன் சுவாமியைச் சந்திக்க வந்தான். பரதேசிகள் போலச் சென்றவர்கள் காவி உடுத்து நீறும் உருத்திராக்கமாலையும் அணிந்து பெரும் சிவபக்தர்களைப் போல இருந்தனர். தனவந்தன் வந்ததும் அந்தப் போலிச்சுவாமியார் சொன்னார்; "மகனே, நீ ஓர் உயிர் வாழ்வுக்காக போராடிக்கொண்டிருப்பது பற்றிக் கேட்க வந்துள்ளாய். இந்தா நீறு. திருஞானசம்பந்தப் பெருமானின் கோளறு பதிகத்தைத் தினமும் படி. ஆலகால விடத்தை உண்ட நீலகண்டன் உனது மகனின் நஞ்சை ஏற்பான். கலங்காதே மகனே சிவமிருக்கப் பயமில்லை. இந்த நீறை மகனின் உடலெங்கும் பூசு. பத்துத் தினங்கள் கழிய மகனுடன் வா" என்றார்."

"தனவந்தனுக்கு உண்டான மகிழ்ச்சிக்கு அளவேயில்லை. இப்போது அவனும் மகனும் அந்தப்

போலிச்சுவாமியாரின் ஆச்சிரமத்திற்குத் தினமும் வந்துசெல்கின்றனர். அந்த ஆச்சிரமத்தில் தினமும் பஜனை நடைபெறுகின்றது. தேவார திருவாசகப் புத்தகங்கள் அச்சடித்து விற்பனை செய்யப்படுகிறது. இது அவர்களின் உழைப்புத்தான். ஆனால் மக்கள் அதை உண்மையென நம்பித் தினமும் நீறணிகின்றனர். உருத்திராட்ச மாலை அணிகின்றனர். இறைவனை வழிபடுகின்றனர், இறைவனின் புகழை விதந்து படிக்கின்றனர். தேவார திருவாசகங்களை மனனஞ் செய்து ஓதுகின்றனர். தமது பணத்தேவைக்காக அவர்கள் செயற்பட்டாலும் மக்களை இறைவழிபாட்டில் நம்பிக்கையுடன் ஈடுபடுத்தி ஒழுக்க சீலராக வாழவைக்கின்றனர். போலியான வாழ்வும் ஏமாற்று வித்தைகளும் கூட மக்களிடம் மெய்யுணர்வைத் தூண்டும். அந்தப் போலிச்சுவாமியும் சீடர்களும் ஒரு ஞானியைப் போல மேலான அறிவையும் புத்திவன்மையையும் கொண்டு மக்களை ஏமாற்றிப் பணம் பறித்து லௌகீக வாழ்க்கையை நடத்தினாலும், அவர்கள் அப்படி ஏமாற்றுவதற்காக இறைவனைப் பற்றி அறிந்து கொள்கிறார்கள். அவர்களது முயற்சிகள் ஆன்ம விடுதலைக்கு உதவாவிட்டாலும் ஏராளமான மக்களின் இறையுணர்வைத்தூண்டி விடுகிறது. அவர்கள் கடவுளுக்காக வழிபாடோ, கிரியைகளோ செய்யாமல் தமது தேவைகளுக்காகச் செய்தாலும் அது பெரும் பயனுடையதாகவே இருக்கும்''.

“அந்தத் தனவந்தன் எச்சில் கையால் கூடக் காகங்கலைக்காதவன். தான தருமம் செய்யாதவன். ஆனால் போலிச்சுவாமியார் தனது ஆச்சிரமத்திற்கு வரும் பக்தர்களுக்கு அன்னதானம் செய்யுமாறு கூறுவார். ஏழை எளியவர்களுக்கு உடுதுணிகளை வாங்கிக் கொடுக்குமாறு கூறுவார். இதனால் ஆச்சிரமத்திற்கு வரும் பக்தர்களின் தொகை நாளுக்கு நாள் அதிகரித்த வண்ணம் இருந்தது. அதனால் போலிச்சுவாமியாருக்கு வருமானம் அதிகரித்தது. மக்கள் அந்தத் தனவந்தனைப் புகழ்ந்தனர். இதனால் அத்தனவந்தன் தர்மம் செய்வதில் பெரும் அக்கறை கொண்டான். அந்த வணிகன் அதன் பின் போலிச்சாமியார் கூறாமலே விசேட தினங்களில் அன்னதானஞ் செய்தான். அத்துடன் அந்தப் போலிச்சுவாமியின் மகிமைகளைப் பற்றி தனது தனவந்த நண்பர்களுக்குக் கூறினான். அவர்கள் அன்னதானமடம் ஒன்றை அமைத்து, அவர்களும் அன்னதானம் செய்தனர். ஆசைகள் அவாக்கள் கொண்ட அசுத்தாத்மாக்களின் இருதயத்தில் தர்ம சிந்தனைகள் இருப்பதில்லை. அப்படியான ஆன்மாக்களின் இதயத்தைப் புனிதப்படுத்துபவன் போலியான குருவாக இருந்தாலும் அவன் போற்றப்பட வேண்டியவனே. இருப்பினும் அவன் தன் வாழ்நாள் முழுவதும் போலியான வாழ்க்கை வாழ்ந்துகொண்டிருந்தான்”.

“போலியான வாழ்க்கை பேராபத்தை உண்டு பண்ணும். அந்தப் போலிச்சுவாமியார் பெரும் தனவந்தனாகிவிட்டார். அதனால் அவர் குடும்பத்தனாக

மாறவிரும்பினார். அதற்கான தருனத்தை எதிர்பார்த்திருந்தார். அந்த ஊர் அரசனின் மகள் போலிச்சுவாமியாரின் பெரும் பக்தை. அவளின் அழகு போலிச்சுவாமியாரை மயக்கியது. அவளைத் திருமணம் புரிந்தால் தான் அந்த நாட்டிற்கு அரசனாக வரலாமென்று நினைத்தார். தனது காதலை அவளிடம் சொன்னார். அவள் ஏற்கனவே இன்னொரு நாட்டின் இளவரசனை விரும்பியிருந்தாள். அதனால் போலிச்சுவாமியாரின் மீது அவளுக்கு வெறுப்பு உண்டானது. அதை அவள் தனது தந்தைக்குத் தெரிவித்தாள். அரசருக்கு அப்போலிச் சுவாமியாரைப் பற்றி அடிக்கடி புகார்கள் வந்துகொண்டிருந்த போதும் அவரின் செயலால் உண்டாகும் பயன்களை விரும்பாதோரே அவரைக் குறைகூறுகிறார்களென நினைத்திருந்தான். மகள் அவரைப்பற்றிக் கூறிய பின் அவரது நடத்தையை அவதானிக்கும் படி தனது ஒற்றர்களுக்குக் கட்டளையிட்டான். ஒற்றர்கள் ஆராய்ந்த போது போலிச் சுவாமியார் தீய செயல்கள் பலவற்றைச் செய்தது தெரியவந்தது. அதனால் அவரைக் கைது செய்து சிறையில் அடைத்தான். பணம், பொருள், காமம் முதலியவற்றால் செய்யும் ஈஸ்வர ஆராதனைகள்தீமையையே தரும். அவர்களது பக்தி முழுவதும் ஆசைகளினால் அழிக்கப்படுவதால் அவர்கள் மிக மோசமானவர்களாகவே வாழ்நாள் முழுவதும் இருப்பார்கள்” என்றார் சுவாமி.

“உலகம் பற்றுக்களினால் உருவானது. பற்றுக்கள் இல்லாவிட்டால் உலகம் அழியாதா?” என்று கேட்டான் மன்னன்.

“பற்றுக்கள் இல்லாவிட்டால் உலகே இல்லை. கடவுள் மீது பற்று வைக்காவிட்டால் கடவுளை நேசிக்கமுடியாது. அதுபோல எல்லா உயிர்கள் மீதும் அன்பு செலுத்தும் ஓர் இல்வாழ்வான் தர்மத்தின் மீது பற்று வைக்காவிட்டால் தர்மம் செய்யமுடியாது. வேலூரில் தர்மபாலன் என்ற இல்வாழ்வான் தனது குடும்பத்துடன் மிகவும் மகிழ்சியாக வாழ்ந்து வந்தான். அவனும் அவனது மனைவியும் பிள்ளைகளும் குடும்பத்தினரும் இல்லற தர்மம் வழுவாது வாழ்ந்து வந்தனர். இல்லறதர்மம் என்பது துறவிகள், ஏழைகள், ஆதரவு இல்லாதவர்கள், தன் குடிப்பிறந்த முன்னோர், தெய்வம், விருந்தினர், சுற்றத்தவர், முதியோரைப் பேணி அவர்களது தேவைகளைப் பூர்த்தி செய்தலாகும். அத்துடன் அறவழியில் பொருள் தேடி அவற்றைத் தானதர்மம் செய்தல் வேண்டும்”.

“மன்னா, ஒருவன் அறவழிப்படி இல்லற வாழ்க்கையை நடத்துவானானால் அவன் அதைவிட்டுவிட்டுத் துறவறம் மேற்கொள்ளத் தேவையில்லை. அறவழியில் வாழும் இல்வாழ்வானே தேவர்களை விடச் சிறப்பானவன். இதை நன்கறிந்த தர்மபாலன் அறநெறியில் பற்றுக்கொண்டு வாழ்ந்து வந்தான். அவனது மனைவியான காயத்திரி தனது கணவனின் மனமறிந்து நடந்து வந்தாள். குடும்பத்திற்கு வேண்டிய நற்பண்புகள் யாவும் அவளிடம் இருந்தன. அவள்

மாண்புடையவளாக இருந்தமையால் அவர்களுக்கு எந்தக் குறைகளும் ஏற்படவில்லை. அவள் தனது கணவனைத் தெய்வமாக மதித்தாள். தன் கணவனைத் தெய்வமாக மதித்து வாழும் பெண்ணைத் தேவர்கள் போற்றுவார்கள் என்று அவள் அறிந்திருந்தாள்''

''தர்மபாலன் தன் மனைவியின் மீது அளவுக்கதிகமான அன்பு வைத்திருந்தான். அது போலக் காயத்திரியும் தனது கணவன் மீது எல்லையில்லாத அன்பை வைத்திருந்தாள். அன்பு என்பது பற்றுத்தானே. ஒருவன் பெறவேண்டிய செல்வங்களுள், அறியவேண்டியவற்றை அறியக்கூடிய மக்களைப் பெறுவதே இவ்வுலகில் பெறுதற்கரிய மிகவுயர்ந்த செல்வமாகும். பெற்றோர் பிள்ளைகள் மீது அளவில்லாத அன்பை வைத்திருந்தனர். அது போலப் பிள்ளைகளும் தம் பெற்றோரில் அளவற்ற அன்பு கொண்டிருந்தனர். சுற்றத்தவர்களும் இனத்தவர்களும் அவர்கள் மீது அளவற்ற அன்பை வைத்திருந்தனர். மன்னா, அன்பும் பற்றுத்தான். கணவன் தனது மனைவி மீதும் மனைவி தன் கணவன் மீதும் கொள்ளும் அன்பு இறைவனைச் சென்றடையும் என்று உபநிடதங்கள் சொல்கின்றன. தர்மத்தின் மீது வைக்கும் பற்றுத்தான் மற்றவர்கள் மீது இரக்கம் கொள்ள வைக்கும். உயிர்களின் மீது பற்றுக்கொண்டு அவற்றிற்கு உதவி செய்பவர்கள் இறைவனுக்கு உதவி செய்பவர்களாகிறார்கள''.

''காலப்போக்கில் தர்மபாலனின் வருமானம் குறைந்தது. ஆனால் தர்மசிந்தனை குறையவில்லை. அவன்

வேலை செய்யும் போதும், இறைவனை வணங்கும் போதும் எல்லா உயிர்களும் சகல சௌபாக்கியங்களும் பெற்று வாழவேண்டும் என்று வேண்டுவான். அவனிடம் பொருள் குறைந்ததால் மிகுந்த பற்றுடன் இறைவனை வணங்கித் தனக்கு அப்பொருளைத் தரவேண்டுமென்று பிரார்த்திப்பான். மறுநாட் காலையில் அவன் வேண்டிய பொருட்கள் அவனது வீட்டிற்கு வரும். அதனால் அவன் இறைவன் மீது அளவுக்கதிகமான பற்று வைத்தான். பற்றுத்தான் பக்தி. பக்தி முற்றினால் அது ஞானம். இறைவன் மீது பற்று வைத்து ஞானவானானவன் இறைவனோடு உறவு கொண்டாடி வேண்டியவற்றைப் பெறுகிறான். பற்று என்பது ஆசைகள் இல்லாத அன்பாக இருத்தல் வேண்டும். ஆசைகள் உள்ள பற்றால் தான் உலகில் பல துன்பங்கள் உண்டாகின்றன. உலகை அழிப்பதும் பற்று; உலகை ஆக்குவதும் பற்று''.

''மன்னா, மாசில்லாப்பற்றான அன்பு மற்றவர்களிடம் விருப்பம் உடையவர்களாய் வாழும் தன்மையை உண்டாக்கும். அது நட்பு என்ற சிறப்பையும் தரும். உலகில் இன்பமாக வாழ்பவர்கள் எல்லோரும் பிறஉயிர்கள் மீது அன்பு கொண்டவர்களாக இருப்பவர்களே. இல்லறத்தில் அன்போடு வாழும் மக்கள் விருந்தினரைப் பேணி உபசரிப்பவர்களாக இருப்பார்கள். அன்புடன் பார்த்து முகம் மலர்ந்து பேசுபவனது உள்ளத்தில் என்றும் திருமகள் இருப்பாள். இப்படியான தன்நலமற்ற அன்பும் பற்றுத்தான். இப்படி வாழ்ந்த தர்மபாலன் மீது பொறாமைப்பட்டான் அவனது நண்பன் சிவபாலன்.

“மன்னா, பிறருக்கு உண்டாகும் பெருமையைக் கண்டு மகிழ்ச்சியடையாமல் பொறாமை கொள்பவர்களும் உண்டு. தர்மபாலனின் வீட்டில் எவ்வேளையிலும் மக்கள் குழுமியிருப்பார்கள். அவனது வீட்டில் நடைபெறும் வைபவங்கள் அனைத்திலும் மக்கள் கலந்து கொள்வார்கள். ஆனால் சிவபாலனின் வீட்டுக்கு யாரும் செல்வதில்லை. அங்கு செல்பவர்களைச் சிவபாலன் தந்திரமாகப் பேசி அனுப்பிவிடுவான். அண்மையில் தர்மபாலனின் பேரனார் நோய்வாய்ப்பட்டார். அந்த ஊரவர்கள் தமது குடும்ப உறுப்பினர் ஒருவர் நோய்வாய்ப்பட்டதாகக் கருதி அக்கறையுடன் செயற்பட்டனர். நோய்வாய்ப்பட்டுப் பத்துத் தினங்களின் பின் அவர் காலமானார். ஊர் சோகத்திலாழ்ந்தது. ஒவ்வொருவரும் தமது இரத்த உறவினர் ஒருவர் இறந்ததைப் போலத் துக்கம் கொண்டாடினர். இது நடக்கச் சில மாதங்களுக்கு முன் சிவபாலனின் தகப்பனார் காலமானார். ஊர்ச்சனங்கள் ஒப்புக்குச் சென்றனரே தவிர வேறு எதுவும் செய்யவில்லை. அதனால் தான் சிவபாலனுக்குப் பொறாமை உண்டானது”.

“சிவபாலனின் நடத்தையில் சிறிது மாற்றமிருப்பதைத் தர்மபாலன் கண்டுகொண்டான். எனினும் அதைப்பற்றி அவன் விசாரிக்கவில்லை. ஊர்ச்சனங்களை எப்படியாவது தர்மபாலனிடம் இருந்து பிரிக்கவேண்டுமென்று சிவபாலன் எண்ணினான்”

“தர்மபாலனின் வீட்டில் தான் பெரும்பாலும் சிவபாலன் இருப்பான். தர்மபாலனிடம் பணவுதவி கேட்டு

யாராவது வருவார்கள். தர்மபாலன் பெரும் பணக்காரனல்லன். அவன் தன்னிடம் உதவி கோரி வருபவர் எவருக்கும் உதவி செய்யாது விட்டதில்லை. அவன் தன்னிடம் பணம் இல்லாவிட்டால் சிவபாலனிடம் கடனாகப் பணத்தைப் பெற்று உதவி கோரியவனுக்குக் கொடுப்பான். பின் அவர்கள் கொடுக்கும் போது அப்பணத்திற்கான வட்டிப்பணத்தையும் சேர்த்துக்கொடுப்பான். தர்மபாலன், சிவபாலனிடம் வட்டிக்குப் பணம் பெற்று மற்றவர்களுக்குக் கொடுப்பது யாருக்கும் தெரியாது''

''அன்று அந்தக் கிராமத்தில் வாழ்கின்ற கதிரேசன் என்பவர் தனது மனைவியின் வைத்தியச் செலவுக்காகப் பெருந்தொகையான பணத்தைத் தா்மபாலனிடம் கேட்டியிருந்தார். தர்மபாலன் அவர் கேட்ட பணத்தைத் தருவதாகக் கூறினான். அதன் பின் சிவபாலனிடம் விடயத்தைச் சொல்லிப் பணம் கேட்டான். சிவபாலன் தருவதாக ஒப்புக் கொண்டான்''

''அன்று காலை கதிரேசனுக்குப் பணம் கொடுத்தல் வேண்டும். காலையில் சிவபாலன் மிகுந்த துக்கத்துடன் தர்மபாலனின் வீட்டிற்கு வந்து சொன்னான்; ''நண்பா, எனக்குப் பணம் தரவேண்டிய ஒருவர் இன்று தரவில்லை. அதனால் உனக்கு இன்று தருவதாகச் சொன்ன பணத்தை என்னால் தரமுடியாதுள்ளது'' என்று போலியாக அழுதான்.

''தர்மபாலன் திகைத்துப் போனான்; ''தம்பி எனது மனைவிக்குச் சத்திரசிகிட்சை செய்தல் வேண்டும். அதற்கு ஐம்பதினாயிரம் ரூபா தேவை. என்னிடம் இப்போது பணமில்லை. இன்று கட்டவேண்டும். ஓரிரு வாரத்தில் திருப்பித் தந்துவிடுவேன். எனது மகன் அனுப்புவான். நோய் அதிகரித்திருப்பதால் உடன் சத்திரசிகிட்சை செய்தல் வேண்டுமென்று வைத்தியர் கூறுகிறார். மகனிடம் இப்போது பணம் இல்லை. எப்படியும் ஓரிரு வாரத்தில் அனுப்பிவிடுவான்'' என்று கதிரேசன் கூறியது அவரது காதில் ஒலித்தது''.

''தர்மா, என்னால் எதுவும் செய்யமுடியவில்லை. பணம் தருவதாகச் சொன்னவருக்கு ஏதோ தடையாம்'' சிவபாலன் கூறிக்கொண்டிருக்கையில் தர்மபாலன் குறுக்கிட்டுச் சொன்னான்; ''இடையூறுகள் வருவது இயற்கை. நீ கவலைப்படாதே. இவ்வளவு காலமும் கேட்டவுடன் பணம் தந்துதவியமைக்கு நான் உனக்கு நன்றி கூறல் வேண்டும்'' என்றான். இருந்த போதும் அவனது மனம் அல்லற்பட்டது. என்ன செய்யலாம் என்று நினைக்கக்கூட அவனால் முடியவில்லை; ''சிவனே, என்னைக் காப்பாற்று'' என்று மனதுள் வேண்டிக்கொண்டான்''.

''சிவபாலன் சென்றுவிட்டான். காயத்திரி காலை உணவருந்த வருமாறு கணவனை அழைக்க வந்தாள். என்றும் மகிழ்வுடன் இருக்கும் அவனது வதனம் அன்று கறுத்திருந்தது.

''கதிரேசனுக்குப் பணம் தருவதாகச் சொன்ன சிவபாலனிடம் பணமில்லையாம்''

“அப்படியா? என்ன செய்யப் போகிறீர்கள். என்னிடமும் பெறுமதியான நகைகள் எதுவும் இல்லை…” மனம் வருந்தினாள் காயத்திரி”.

“நான் வணங்கும் சிவன் என்னை ஒருபோதும் சோதித்ததில்லை….” என்று அவன் கூறிக்கொண்டிருக்கும் போது கதிரேசன் வந்துகொண்டிருந்தார். அவரைக் கண்டதும் சற்றுத் தடுமாறினான் தர்மபாலன”.

“தர்மா, மகன் பணத்துடன் காலையில் வீட்டிற்கு வந்துவிட்டான். இதைச்சொல்லிவிட்டுப் போகத்தான் வந்தேன்” என்றார் கதிரேசன்”.

“சிவனே” என்றான் தர்மபாலன்”.

“மன்னா, ஆசைகள் உள்ளவன் தான் துன்பப்படுவான். பற்றுக்கள் தான் செயலாகின்றன. பற்றுக்களைச் செயலாக்காவிட்டாலும் அவை மனதில் இருந்து துன்பங்களைக் கொடுத்துக்கொண்டேயிருக்கும். தீய நினைவுகளும் தர்மசிந்தனைகளைத் தடுக்கும். துயரங்களை உண்டாக்கும். பற்றுக்கள் தான் மனிதனை நல்வழிப்படுத்துவதும், அவனை அழிப்பதும்” என்றார் சுவாமி.

மன்னன் எதுவும் பேசவில்லை.

“சுவாமி சொன்னார்; “மெய்யானவற்றைப் பொய்யானவை என்றும், பொய்யானவற்றை மெய்யானவை என்றும் மனிதருள் பலர் நம்புவதால் தான் துன்பப்படுகிறார்கள். தர்மபாலன் மெய்யான பொருளை உணர்ந்திருந்தான். அதனால் அவன் மெய்யான பொருளான இறைவன் மீது நம்பிக்கை

வைத்திருந்தான். அதனால் இறைவன் அவனது நம்பிக்கையை உறுதிப்படுத்தினார். சிவபாலன் மெய்யானதைப் பொய்யானதென்று நினைத்தான். அதனால் அவன் நினைத்தது நடக்கவில்லை. இருப்பினும் பொய்யானவற்றையே மெய்யென்று அவன் இப்போதும் நம்புகிறான். இது தான் துன்பங்களுக்குக் காரணம்''

''மன்னா, வேலூரில் மனோகரன் என்ற வணிகன் ஒருவன் இருந்தான். அவனிடம் அளவுக்கதிகமான பணம் இருந்தது. தனது பணத்தின் மூலம் அவன் நினைத்ததையெல்லாம் சாதித்து வந்தான். வேலூரில் ஒருமுறை கலைவிழா ஒன்று நடைபெற்றது. அதற்கு அவனும் தர்மபாலனும் சிவபாலனும் சென்றனர். அந்த விழாவுக்கு அழகான ஒரு பெண் தனது தோழிகளுடன் வந்திருந்தாள். மனோகரன் அவளது அழகில் சொக்கிப் போனான். அவளது அங்கங்கள் யாவும் அளவெடுத்துச் செய்யப்பட்டன போல இருந்தன. அவளின் அழகு அவனைப் போதைக்குள்ளாக்கியது. அதனால் அவன், அவள் செல்லுமிடங்கள் எல்லாவற்றிற்கும் சென்றான். தர்மபாலன் விழாவைப் பார்க்க விரும்பினான். ஆனால் அவள் கலைவிழாவுக்கென அமைக்கப்பட்டிருந்த வர்த்தக நிலையங்களைப் பார்வையிட்டாள். மனோகரனும் அக்கலைவிழாவில் பெரியதொரு வர்த்தக நிலையத்தை அமைத்திருந்தான். அந்த வர்த்தக நிலையத்துள் அவள் சென்றாள். மனோகரனுக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது. அவன் உள்ளே சென்றான். அவள் தெரிந்தெடுத்த பொருட்களை

மிகவும் மலிவு விலையில் கொடுத்தான். அவளிடம் அப்பொருட்களை வாங்கக் கூடிய பணம் அப்போது இருக்கவில்லை. அதனால் அவள் தயங்கினாள். நிலைமையை உணர்ந்து கொண்ட அவன்; ‘‘பரவாயில்லை பொருட்களை எடுங்கள். நாளைக்குப் பணத்தைக் கொண்டுவந்து தாருங்கள்’’ என்றான்’’.

‘‘என்னைத் தெரியுமா உங்களுக்கு’’ மகர யாழ் போல ஒலித்தது அவளது குரல்.

‘‘தெரியாது, யாரென்று சொல்லுங்கள்’’ என்றான் மனோகரன்’’.

‘‘எனது பெயர் சௌமியா, நான் விஸ்வநாதனின் மகள்’’ என்றாள் அவள்’’.

‘‘விஸ்வநாதனின் மகளா நீங்கள்? பணமில்லாவிட்டாலும் பொருட்களை எடுங்கள். நான் விஸ்வநாதனிடம் பணத்தைப் பெறுகிறேன்’’ என்றான் மனோகரன்’’.

‘‘அப்பா மிகவும் கண்டிப்பானவர். அவர் யார் சொல்வதையும் கேட்கமாட்டார்’’ என்று கூறிவிட்டு அவள் சென்றுவிட்டாள்’’.

‘‘மறுநாள் விஸ்வநாதனின் வீட்டிற்குச் சென்றான் மனோகரன். விஸ்வநாதன் மனோகரனிடம் பொருட்களை வாங்கி விற்பனை செய்பவன். அதனால் விஸ்வநாதன் வெகு மரியாதையுடன் மனோகரனை வரவேற்று ஆசனத்தில்

அமர்த்தினான். மனோகரனது வருகை அவனுக்கு அளவில்லாத ஆச்சரியத்தையும், மகிழ்ச்சியையும் கொடுத்தது''.

''மனோகரனோடு வந்த ஊர்ப் பெரியவனான பொன்னம்பலம் சொன்னார், ''விஸ்வநாதா, உனது மகளை நேற்று மனோகரன் கலைவிழாவில் கண்டு விரும்பிவிட்டான். உனக்கு விருப்பமானால் சொல்லு அடுத்த முகூர்த்தத்தில் திருமணத்தை முடித்துவிடலாம்''

''விஸ்வநாதனால் தனது காதுகளை நம்பமுடியவில்லை. அதிர்ச்சியுடன் பார்த்தான். ''உனது மகள் மனோகரனின் வர்த்தக நிலையத்திற்குச் சென்று பல பொருட்களைப் பார்த்துவிட்டு அவற்றை அங்கேயே வைத்துவிட்டு வந்துவிட்டாள். அவள் ஆசைப்பட்டு எடுத்த பொருட்கள் அனைத்தையும் மனோகரன் கொண்டுவந்துள்ளான்'' என்று கூறியவாறு பெரியதொரு பெட்டியைத் தூக்கி வைத்தார் பொன்னம்பலம்''.

''விஸ்வநாதனுக்கு அப்போது நம்பிக்கை வரவில்லை. ''விஸ்வநாதா..'' என்று பலமாக அழைத்தார் பொன்னம்பலம்''.

''விஸ்வநாதன் திடுக்கிட்டு மிரட்சியடைந்தான்; ''விஸ்வநாதா, நீ பெண்ணுக்குச் சீதனமாக எதுவும் தரத்தேவையில்லை. உனது விருப்பத்தைத் தெரிவி'' என்றார் பொன்னம்பலம்''.''

“எனக்கு நல்ல விருப்பம்” தடுமாறினான் விஸ்வநாதன்”.

“மனோகரன் மகிழ்வுடன் திருமண ஏற்பாடுகளைச் செய்தான். அந்த ஊரில் அப்படி ஒரு திருமணம் இதுவரை நடைபெறவில்லை. அதுபோல இனியும் நடக்கக்கூடாது என்று நினைத்துச் செயற்பட்டான் மனோகரன்”.

திருமணம் நடைபெற இரண்டு தினங்கள் இருந்தன. மனோகரன் சௌமியாவுக்குத் தேவையான நகைகள், உடுபுடைவைகள், மற்றும் வேண்டிய பொருட்கள் எல்லாவற்றையும் வாங்கிக் கொண்டு விஸ்வநாதனின் வீட்டிற்குச் சென்றான். அன்று அவன் சௌமியாவைச் சந்தித்துப் பலமணி நேரம் உரையாடினான். அந்த நேரம் சொர்க்கத்தில் இருப்பதைப் போன்ற உணர்வு அவனின் இதயத்தை நிரப்பியிருந்தது. அவளது கண்களை ஆசையோடு பார்த்தான். அதில் குடிகொண்டிருந்த மோகம் அவனை வதைத்தது. உதடுகளைப் பார்த்தான். அளவான சிவந்த உதடுகள் ஈரமாக இருந்தன. அந்த ஈரம் தேனோ கரும்போ என நினைத்தான். அவனுக்குச் சிரிப்பு வந்தது. கன்னங்கள் சிவந்து பொங்கியிருந்தன. அதில் அழகுக்காகப் பூசப்பட்டிருந்த நறுமணப்பொடி கிளர்ச்சியை உண்டுபண்ணியது. கன்னத்தை ஒருமுறை தொட்டுப் பார்க்க வேண்டுமென்ன நினைவு மெல்ல அவனது மனதுள் அரும்பியது. உமிழ்நீரை விழுங்கியவாறு மெதுவாகப் பார்வையைக் கீழே இறக்கினான். அவளது கழுத்துப் பகுதி மறைப்பின்றி இருந்தமையால் அதன் அழகும் பொலிவும் அவனை மயக்கின.

அந்தக் கழுத்தே இவ்வளவு கவர்ச்சியாக இருந்தால் அவளது உடல் எப்படி இருக்கும் என்று கற்பனை செய்து பார்த்தான். அவனது கற்பனைக்கு அது எட்டவில்லை. மோக மிகுதியுடன் அவனது பார்வை கீழே இறங்கியது. அப்பகுதியின் கவர்ச்சி அவனைப் பித்தனாக்கியது. அவளோடு பேசவார்த்தைகள் வரவில்லை. சிறிது நேரம் பொறுத்து அவன் விடைபெற்றான். அன்று இரவு முழுவதும் பல்வேறு வகையான தோற்றங்களில் சௌமியா அவனது விழித்திரைக்குள் வலம் வந்தாள். விடிந்தால் திருமணம். ஊரே அல்லோலகல்லோலப்பட்டுக் கொண்டிருந்தது. தர்மபாலன் பரபரப்புடன் மனோகரனது வீட்டுக்கு வந்தான்''.

''மனோகரா, உனக்கொரு அதிர்ச்சியான செய்தி சொல்லவே இப்போது வந்தேன். மனதைத் திடப்படுத்திக்கொள்''

''என்ன? என்ன?'' பரபரத்தான் மனோகரன்''.

''சிறிது நேரம் பேசாது நின்ற மனோகரன்'', சௌமியா தனது காதலனுடன் சென்றுவிட்டாள். அதை அவமானம் என நினைத்த விஸ்வநாதன் தற்கொலை செய்துகொண்டார்''

''மனோகரனால் அதைத் தாங்கிக்கொள்ள முடியவில்லை. ''நான் தற்கொலை செய்யப் போகிறேன்'' என்று பலமாகப் புலம்பினான்''.

''தர்மபாலனும் சிவபாலனும் அவனுடன் இருந்தனர். அவன் பல நாட்கள் நித்திரை கொள்ளவில்லை. விசரனைப் போல நடந்து கொண்டான். அவனது வீட்டுக்கு

நாகலிங்கம் என்ற சுவாமியார் அடிக்கடி வருவார். அவரிடம் மனோகரன் ஆலோசனைகள் கேட்பான். அவர் கூறுவதை வேதவாக்காகக் கருதுவான். அவர் தல யாத்திரிரைக்குச் சென்று அன்று தான் ஊருக்குத் திரும்பியிருந்தார். மனோகரனுக்கு நேர்ந்த துன்பத்தைக் கேள்விப்பட்டு மனோகரனது வீட்டிற்கு வந்தார்.

"ஐயோ சுவாமி, எனக்கு வாழ்க்கை வெறுத்துவிட்டது. இனிநான் ஏன் வாழவேண்டும்?. சௌமியா என்னை வெறுத்து ஒதுக்கிய பின் நான் வாழ வேண்டுமா? என்னிலும் பார்க்க அவள் அவனில் எதைக்கண்டாள். விஸ்வநாதனின் வீட்டு வேலைக்காரனான அவனிடம் எதைக்கண்டு மயங்கினாள்? விஸ்வநாதனின் பொருட்களையும் நான் கொடுத்த பொருட்களையும் கொண்டு சென்றுவிட்டாள். அது முடிய என்ன செய்வாள்...? சுவாமி, என்னால் அவளின் பிரிவைத் தாங்க முடியவில்லை. அவள் இப்பொழுது வந்தாலும் நான் அவளை ஏற்பேன். சுவாமி, தர்மபாலனும் சிவபாலனும் அவளைத் தேடித்தர மறுக்கிறார்கள். நீங்கள் தேடித்தாருங்கள்..." விம்மி விம்மி அழுதான் மனோகரன்".

"மனோகரா, நீ அவள் மீது காதல் கொள்ளவில்லை. மோகங்கொண்டுள்ளாய். காதல் கொண்டால் அவளின் நல்வாழ்வை விரும்புவாயே தவிர அவளது உடலுக்கு ஆசைப்பட மாட்டாய். விபச்சாரம் செய்வோர் தான் உடல் மீது ஆசைப்படுவார்கள். உடல் மாற்றமடையும். அத்துடன் அது நிலையில்லாதது. பெண்ணை மலருக்கு ஒப்பிடுவது

ஏனென்றால் அவர்களின் உடல் வாடாமல் இருக்கும் வரை தான் அழகு. மோகம், சுவை என்பவற்றைத் தரும். மலரைப்போல வாடினால் அந்த உடல் காமத்திற்குப் பயன்படாது. அன்பு தான் நிலையானது. அதனால் தான் அடியார்கள் இறைவன் மீது அன்பு கொள்கிறார்கள். ஒரு கணவன் தன் மனைவி மீது அன்பு கொண்டால் அந்த அன்பு இறைவனைச் சென்றடையும். அன்பை எந்த உயிர் மீது செலுத்தினாலும், அந்த அன்பு இறைவனைச் சென்றடையும். எனவே நிலையில்லாதவற்றின் மீது ஆசை கொள்ளாது நிலையானவற்றின் மீது ஆசைகொள். இறைவனைப் பிரார்த்தனை செய்; தான தர்மங்களைச் செய்; ஏழை எளியவர்களுக்கு உதவு'' என்று சுவாமியார் கூறிக்கொண்டிருக்கும் போது மனோகரன் குறுக்கிட்டான்''.

''சுவாமி, நீங்கள் கூறியவற்றுள் நான் எதைச் செய்யவில்லை. நான் இறைவனைப் பிரார்த்தனை செய்யவில்லையா? தான தர்மங்களைச் செய்யவில்லையா...? ஏழை எளியவர்களுக்கு உதவி செய்யவில்லையா...? அப்படியிருக்க இப்படி ஏன் நடந்தது'' பலமாக அழுதான் மனோகரன்''.

''நீ எல்லாவற்றையும் செய்து தான் வருகிறாய். இனித் தீவிரமாகச் செய்'' குறுக்கிட்டான் மனோகரன்; ''நான் செய்யமாட்டேன். இறைவன் எங்கே இருக்கிறார்? இறைவன் என்றொருவன் இருந்தால் இப்படி நடக்குமா....? நீங்கள் வயிற்றுப் பிழைப்புக்காக இறைவனின் பெயரைச் சொல்கிறீர்கள்.

நான் பிள்ளையாருக்கு எவ்வளவு நிதியுதவி செய்தேன்; எவ்வளவு நகை வாங்கிக் கொடுததேன். மணிக்கோபுரம் கட்டியது நான் தானே. வருடா வருடம் தேர்த்திருவிழாவை எவ்வளவு விமர்சையாகச் செய்கிறேன்'' அழுதழுது சொன்ன மனோகரன் ஆத்திர மிகுதியால் கத்தினான். ''இனி என்னிடம் கோயிலுக்கு நிதி வேண்டுமென்று யாரும் வரக்கூடாது. ஏழை எளியவர்களுக்குக் கடைசிவரையும் தானம் வழங்கமாட்டேன். அவர்கள் எல்லோரும் உழைத்துச் சாப்பிடட்டும். இல்லாவிட்டால் கடவுளிடம் கேட்டுப்பெறட்டும். இல்லாவிட்டால் கடவுள் இருக்கிறார் என்று சொல்கின்ற சுவாமியாரைப் போன்றவர்களிடம் சென்று வாங்கட்டும்''

''ஆத்திரத்தின் உச்சியில் இருந்த மனோகரனோடு நாகலிங்கம் சுவாமியார் எதுவும் பேசவில்லை. ஆத்திரத்துடன் இருப்பவனுக்கு எதுவும் விளங்காது. விளங்கப்படுத்தவும் முடியாதென்று அவருக்குத் தெரியும்''.

''சிறிது நேரம் ஆத்திர மிகுதியால் கத்திய மனோகரன் பின் விம்மி விம்மி அழுதான். வெகு நேரம் அழுதான். பின்; ''எனக்கேன் சுவாமி இந்தத் துன்பம்'' என்று கேட்டான்''.

''மனோகரா, அழாதே. விதி வலியது. ஒருவனது வாழ்வு வளம் பெறுவதற்கு விதி உதவிகள் செய்யும். அவனது வாழ்வு அழிவதற்கும் விதியே காரணமாக அமையும். உனது தந்தையார் ஒரு சாதாரணமான விவசாயியின் மகன். அவர் தனது விளைபொருட்களோடு மற்ற விவசாயிகளின்

பொருட்களையும் சந்தை விலைக்கு மொத்தமாகக் கொள்வனவு செய்து சில்லறையாக விற்கத் தொடங்கினார். அது அவருக்குப் பெரும் இலாபத்தைக் கொடுத்ததால் பிறநாடுகளிலிருந்து பொருட்களைக் கொள்வனவு செய்து மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்றார். அதனால் பெரும் பணக்காரனானார். அவர் எடுத்த எல்லா முயற்சிகளும் இலாபத்தைக் கொடுத்தன. உனது மாமன் நாகநாதன் பெரும் வணிகன். பிறநாடுகளோடு வாணிபம் செய்தவன். அவரிடம் பொருட்களைக் கொள்வனவு செய்த பிறநாட்டு வியாபாரிகள் ஏமாற்றிவிட்டார்கள். அதனால் மனமுடைந்த உனது மாமா உற்சாகமிழந்து வாணிபம் செய்வதை விட்டுவிட்டார். அதனால் உனது தகப்பனாரின் உதவிகளினாலே வாழ்கிறார். எந்தத் தொழிலைச் செய்தாலும் இலாபமும் நட்டமும் வரும். விதி வசத்தால் நட்ட மேற்பட்டால் தொழிலைக் கைவிட்டுவிட்டுச் சோம்பியிருக்கக் கூடாது. தொடர்ந்து முயற்சித்துக் கொண்டேயிருத்தல் வேண்டும்''.

‘‘தாமோதரனைப் பார். பெரிய வணிகன் அவனது கப்பல்கள் மூன்று சூறாவளியினால் கடலுட் தாண்டுவிட்டன. இரண்டு கப்பல்களைக் கடற்கொள்ளையர்கள் கடத்திச் சென்றுவிட்டனர். அதனால் தாமோதரனின் வாழ்வு கெட்டுப்போனதா? இல்லையே… அவன் அரசிடம் கடன் பெற்று வாணிபம் செய்கிறான்''.

‘‘உனது தந்தை பெரும் கோடீஸ்வரர். அவரால் வயிறு நிறைய உண்ண முடிகிறதா..? ஐம்பது வயதிலேயே

அவருக்குப் பல நோய்கள். இனிப்புக்கூடாது; மாப்பொருட்கள் கூடாது; எண்ணெய் வகைகள் கூடாது. இப்படியிருந்தும் அவர் மகிழ்வுடன் தானே வாழ்கிறார். உங்களிடம் கூலி வேலை செய்யும் வேலாயுதத்தைப் பார். எழுபது வயதானாலும் அவன் எல்லாம் சாப்பிடுகிறான். ஆனால் சாப்பிடப் போதிய வருமானம் இல்லாததால் சில சமயங்களில் பட்டினியுடன் இருக்கிறான். இவை யாவும் விதியின் விளையாட்டு''

''பணக்காரனாக இருந்தாலும் உலக இன்பங்களை அனுபவிக்க முடியாது. பொருளுள்ளவர்கள் பலருக்கு அப்பொருட்கள் பல இடங்களில் உதவி செய்வதில்லை. அறிவுள்ளவர்கள் பலர் பணம் பொருளைத் தேட முடியாதவர்களாய் இருக்கிறார்கள். பண்டிதர் வீரகத்தி பல துறை விற்பனர். கல்வியறிவில் அவரை விட மேலானவர்கள் இவ்வூரில் இல்லை. பெரும் பெரும் பதவிகளில் இருப்போரும் அவர்களது பிள்ளைகளும் அவரிடம் வந்து தெரியாதவற்றிற்கு விளக்கம் கேட்டுச்செல்கின்றனர். கணேசன் மிகப் பெரிய பதவியில் இருக்கிறான். அவனுக்குக் கீழ் ஆயிரக்கணக்கானோர் வேலை செய்கின்றனர். அவனது சொல்லைக் கேளாமல் நாட்டில் எதுவும் இயங்காது. ஆனால் அவன் பண்டிதர் வீரகத்தியைப் பெரும் ஞானியாகக் கருதுகிறான். அவரிடம் வந்து ஆசிபெறாமல் அவன் எந்தக் காரியமும் செய்வதில்லை. நாட்டுக்கு நன்மை செய்வதாக இருந்தால் கூட அவன் அவரிடம் கேட்காமல் செய்யமாட்டான். ஆனால் பண்டிதர் ஏழை. அவரின்

மகள் முப்பத்தேழு வயதாகியும் திருமணமாகாமல் இருக்கிறாள்''

''கல்வி கற்பிப்பதற்கும், ஆசி வழங்குவதற்கும் பணம் பெறக்கூடாது என்பது பண்டிதர் வீரகத்தியின் கொள்கை. அவர் படித்த நூல்கள் அப்படித்தான் சொல்லியுள்ளன. அதனால் அவர் மிகுந்த ஏழையாக வாழ்கிறார். ஒருவன் மிகுந்த அறிவாளியாக இருந்தாலும் விதி அவனைப் பணக்காரனாக்காது. அறிவைத் தேடுகின்ற முயற்சியில் விதிப்பயனால் நல்லவை தீயவையாகலாம். தீயவை நல்லவையாகலாம். பண்டிதரிடம் சீதனம் பெறாமல் அவரது மகளைத் திருமணஞ் செய்ய பலர் விரும்பினர். ஆனால் ஒவ்வொருவரிடமும் ஒவ்வொரு குறை இருந்தது. சிலருக்கு சாதகம் பொருந்தவில்லை. சிலர் சாதியில் குறைந்தவர்களாக இருந்தனர். சிலர் நல்ல குடும்பத்தில் பிறந்திருக்கவில்லை. சிலரிடம் பண்டிதர் எதிர்பார்த்தவை இல்லை. இதனால் அவரது மகளுக்குத் திருமணம் நடைபெறவில்லை. சௌமியாவுக்கு இருபது வயதுகூட நிரம்பவில்லை. காதலித்துத் தான் விரும்பியவனுடன் சென்றுவிட்டாள். கெங்காதரனின் மகளுக்குப் பதினைந்து வயது. எத்தனை திருமணங்கள் இதுவரை பேசி வந்துள்ளன. எல்லாம் ஆண்டவன் சித்தம். ஆண்டவனின் சித்தம் செயல்களாக வரும். அது தான் விதி'' என்றார் நாகலிங்கம் சுவாமிகள்''.

“சுவாமி எனக்கு வாழ்ககை வெறுத்துவிட்டது. நான் உங்களுடன் வந்து ஆச்சிரமத்தில் தங்கியிருக்க விரும்புகிறேன்” என்றான் மனோகரன்”.

“நல்லது அப்படியே செய்” என்றார் நாகலிங்கம் சுவாமியார்”.

“மனோகரன் சுவாமியாரின் ஆச்சிரமத்தில் தங்கியிருந்தான். நாட்கள் நகர்ந்து கொண்டிருந்தன. அவனது பெற்றோரும் உறவினர்களும் அடிக்கடி வந்து அவனைப் பார்த்துச் சென்றனர்”.

“தர்மபாலனும் சிவபாலனும் அடிக்கடி ஆச்சிரமத்திற்கு வருவார்கள்”.

“அவர்கள் வந்தால் மனோரகன் சௌமியாவைப் பற்றி மிகுந்த அக்கறையுடன் விசாரிப்பான்”

“தர்மபாலன் தர்மசிந்தனை உள்ளவன். அதனால்; “மனோகரா, உன்னைச் சௌமியா விரும்பவில்லை. அவள் உன்னை விரும்பியிருந்தால் நீ துயரப்படுவது நியாயமானது. அவள் இன்னொருவனை விரும்பி அவனுடன் சென்று குடும்பம் நடத்துகிறாள். இன்னொருவனின் மனைவியைத் தாயாக நினைக்கவேண்டும் என்று இந்து சாஸ்த்திரங்கள் கூறுகின்றன. அது தெரிந்தும் நீ அவள் மீது காமம் கொள்கிறாய். நினைவுகள் தான் செயல்களாக மாறுகின்றன. அதனால் தான் இந்து சாஸ்திரங்கள் தீயவற்றை எண்ணக்கூடாது; அவற்றைப் பார்க்கக்கூடாது என்று கூறுகின்றன. தீயவற்றை எண்ணுவதால் மனம் தர்மத்தை

எண்ணாது அதை தீர்க்க முயலும். தீயவற்றை ஆசையோடுப் பார்த்தால் தீயது நல்லதாகத் தெரியும். தொடர்ந்து பார்த்தால் அது தர்மத்தை மறைக்கும். அதனால் தீமை தான் வரும். தீயவற்றைக் கேட்டால் ஆசை உண்டாகி அவா ஏற்படும். அவா சிந்திக்காது பல தீமைகளைச் செய்யத் தூண்டும். இதனால் தர்மசிந்தனைகள் அழிக்கப்படும். அதனால் நண்பா, நீ அவளைப்பற்றி நினைக்காதே. நீ நினைப்பதால் தான் என்னிடம் அவளைப் பற்றிக் கேட்கிறாய். நான் அவளைப் பற்றிச் சொன்னால் உனது மனம் துன்பப்படும். அதனால் அதைப்பற்றிக் கேளாதே. தர்ம சிந்தனைகளைத் தீய செயல்கள் மறைக்கும் என்பதால் நான் அவளை அன்றே மறந்துவிட்டேன். அவள் எங்கே இருக்கிறாள்; எப்படி வாழ்கிறாள் என்று எனக்குத் தெரியாது. நண்பா, உன்னை மிகவும் மன்றாட்டமாகக் கேட்கின்றேன் தயவு செய்து இன்னொருவனின் மனைவியைப் பற்றிச் சிந்திக்காதே. செயலை விடச் சிந்திப்பது பாவம்'' என்பான்.

''அதனால் தர்மபாலனுடன் மனோகரன் பெரிதாகக் கதைப்பதில்லை. அத்துடன் தர்மபாலன் வரும் வேளைகளில் நல்லவற்றை உபதேசிப்பான். சுவாமியாரும் நேரம் கிடைக்கும் போதெல்லாம் தர்ம உபதேசங்கள் செய்வார். இதனால் ஆச்சிரம வாழ்க்கையும் மனோகரனுக்கு வெறுத்தது. அவன் எந்த நேரமும் சௌமியாவின் சிந்தனையுடனேயே இருந்தான்''.

“சிவபாலன் வந்தால் அவன் சௌமியாவைப் பற்றியே கதைப்பான்”.

“அன்று சிவபாலன் மிகுந்த மகிழ்ச்சியுடன் வந்து மனோகரனைச் சந்தித்தான்; “நண்பா, நான் இன்று வேலூரில் உள்ள வெள்ளெருவைப் பிள்ளையார் கோயில் சதுர்த்தி விழாவில் சௌமியாவைச் சந்தித்தேன். பச்சை நிறக்காஞ்சிபுரப் பட்டுச்சேலை உடுத்திருந்தாள். அந்த உடையில் சரஸ்வதிதேவி வந்திருப்பது போலத் தெரிந்தது. கழுத்து நிறையத் தங்க நகைகள் போட்டிருந்தாள். அத்தனையும் நீ வாங்கிக் கொடுத்தவை. தங்கரதம் ஒன்று வீதியில் உலா வந்ததைப் போல அவள் நடந்து சென்றாள். அவளது அலங்காரத்தைப் பார்க்க ஆயிரங்கண்கள் தேவை. இயல்பாகவே கூரிய வேலைப்போன்ற அவளது விழிகளுக்கு கருநிற மை தீட்டியிருந்தாள். அது கருவேலாகப் பளபளத்தது. சிவத்த கன்னங்கள், அப்பப்பா அவளை வர்ணிக்க நானென்ன புலவனா? அவள் உனக்குரியவள். உன்னுடன் வாழ்ந்தால் நீ சொர்க்கத்தில் இருந்திருப்பாய்” என்றான்”

“அதன் பின் மனோகரனின் போக்கில் மாற்றம் ஏற்பட்டது. ஆச்சிரமத்துக்குள் எந்த நேரமும் படுத்திருந்தான். முன்பென்றால் பூசைகளில் கலந்துகொள்வான். நாகலிங்கம் சுவாமியாருடன் எப்பொழுதும் இருந்து கதைத்துக்கொண்டிருப்பான். அவன் சுவாமியாருடனும் தர்மபாலனுடனும் கதைப்பதைத் தவிர்த்து வந்தான். ஒருமுறை தர்மபாலன் வந்தபோது. இனிமேல் நீ வந்து என்னைச்

சந்திக்காதே'' என்று கூறிவிட்டான்'' இருப்பினும் தர்மபாலன் வழமை போல வந்து சுவாமியாருடன் கதைத்துவிட்டுப் போவான். சிவபாலன் பின் அடிக்கடி வந்து மனோகரனுடன் கதைத்துவிட்டுச் செல்வான். அவர்களது உறவில் நாகலிங்கம் சுவாமியாருக்குச் சந்தேகம் ஏற்பட்டது. அதனால் அவர்களை அவதானிப்பதற்குச் சீடர்களில் ஒருவனை நியமித்தார்''.

''சிவபாலன் அடிக்கடி மனோகரனைச் சந்தித்து ஏமாற்றுக் கதைகள் கூறிப் பணம் பெற்றுச் சென்றான்; ''சௌமியா இப்போ உன்னை விரும்புகிறாள். தான் செய்த தவறை மன்னிக்கும்படி மன்றாட்டமாகக் கேட்கிறாள். வீட்டில் இருந்து கொண்டுவந்த பொருட்கள் யாவும் எனது கணவருக்குத் தொழில் கிடைக்காமையால் செலவாகிவிட்டது. அவர் தொழில் பெற்றதும் மனோகரன் தந்த பொருட்களைத் திருப்பிக் கொடுக்க வேண்டும் என்கிறாள்'' என்று சிவபாலன் சொன்னதும் மனோகரனின் மனதில் இரக்கம் பிறந்தது. அவளுக்கு உதவி செய்ய விரும்பி சிவபாலனிடம் பணம் கொடுத்து அனுப்பினான். அவள் மனோகரன் மீது விருப்பம் கொண்டுள்ளாள் எனத் தெரிவித்துப் பல தடவைகள் சிவபாலன் பெருந்தொகையாகப் பணத்தைப் பெற்றுச் சென்றுள்ளான். ஆனால் அப்பணத்தை அவன் சௌமியாவுக்கு கொடுக்கவில்லை. அவள் எங்கேயிருக்கிறாள் என்று யாருக்கும் தெரியாது. தந்தை தற்கொலை செய்ததும் அவளுக்குத் தெரியாது''

''மூன்று வருடங்கள் கழிந்தன. மனோகரன் முன்பு போலவே இருந்தான். சிவபாலன் வந்து மனோகரனிடம் பணம்

பெற்றுச் சென்றான். அவன் ஒருமுறை வந்த போது மனோகரன் சொன்னான்; ‘‘சிவபாலா, நான் சௌமியாவை ஒரு தரம் பார்க்க வேண்டும். தேவதையைப் போல அவள் இருக்கிறாள் என்று சொல்கிறாய். அவளின் அழகை ஒருமுறை தரிசிக்க வேண்டும். ஒருமுறை அவளோடு பேசவேண்டும்’’

‘‘அதற்குச் சிவபாலன் சொன்னான்; ‘‘நான் இது பற்றி அவளிடம் கதைத்துவிட்டு வந்து சொல்கிறேன். அவளுக்குச் சொல்லாது சென்று சந்தித்தால் அவளது கணவன் அவளைச் சந்தேகிப்பான். அதனால் அவளது வாழ்க்கை பாழாகிவிடும்’’

‘‘நீ சொல்வது சரிதான். அவளைக்கேட்டுக்கொண்டு விரைவாக வா’’ என்று மனோகரன் சொன்னான். அதன் பின் சிவபாலன் வருவது படிப்படியாகக் குறைந்து இறுதியில் முற்றாக வராமல் விட்டுவிட்டான்’’.

‘‘மேலும் சில காலங்கள் கழிய நாகலிங்கம் சுவாமியாரும் மனோகரனும் அயலூருக்குத் தலம் ஒன்றைத் தரிசிக்கச் சென்றனர். சிவபாலன் வராமையால் கவலைகொண்டிருந்த மனோகரனைச் சுவாமியார் மன ஆறுதலுக்காக அழைத்துச் சென்றார். ஆனால் மனோகரன் சௌமியாவையும் சிவபாலனையும் தேடிக் கண்டுபிடிக்கும் நோக்கத்தில் சென்றான்’’

‘‘மனோகரனிடம் ஆடம்பரமான பல மோட்டார் வண்டிகள் நின்றன. அப்படிப்பட்ட சொகுசான வாகனமொன்றில் தான் சுவாமியாருடன் அவன் சென்றான்’’

“சுவாமியார் தலயாத்திரை செய்வதானால் கால்நடையாகவே செல்வார். பல சிரமங்களுக்கு மத்தியில் சென்ற அவருக்கு ஆடம்பரமான வண்டியில் சென்றது மகிழ்வைக் கொடுத்தது. வசதிகள் மீது பற்று உண்டானது. அதனால் மனோகரனைத் தனது நிரந்தரமான சீடனாக ஆச்சிரமத்தில் வைத்துக்கொள்ள வேண்டும்” என்று நினைத்துக் கொண்டார்”.

“சுவாமியாரும் மனோகரனும் அந்தத் திருத்தலத்திற்குச் சென்று சுவாமி தரிசனம் செய்தனர். மனோகரன் சுவாமி தரிசனம் செய்த போதும் மனம் சௌமியாவையும் சிவபாலனையும் தேடியது”

“சுவாமி தரிசனம் செய்துவிட்டு அவர்கள் இருவரும் வெளிவீதிக்கு வந்தனர். வெளிவீதியில் நாலைந்து பிச்சைக்காரர்கள் இருந்தனர். மனோகரன் ஒவ்வொருவருக்கும் பணம் கொடுத்தான். அங்கு பிச்சை எடுத்துக்கொண்டிருந்த ஒரு பெண்ணைக் கண்டதும் மனோகரன் அதிர்ந்து போனான். அவளின் உடலில் தசையே இருக்கவில்லை. எலும்புக்கூடு ஒன்று குத்தியிருப்பது போல இருந்தது. மனோகரன் அதிர்ச்சியுடன்; “சிவனே” என்று கூறியவாறு முகத்தை மறுபக்கம் திருப்பினான்”.

“அப்பொழுது ; “சுவாமி, நீங்கள் நாகலிங்கம் சுவாமி தானே” என்று அந்தப்பெண் முனகியபடி கேட்டாள்”

“ஆம். நீர் யார்?” என்று கேட்டார் நாகலிங்கம் சுவாமியார்”.

“பதில் சொல்லாது அவள் விம்மி விம்மி அழுதாள். அவளுக்கு மேல் மூச்சு வாங்கியது. அதைக் கவனிக்காது மனோகரன் நடந்து சென்று தனது வாகனத்திற்கு அருகில் நின்றான்”

“நான் பாவி சுவாமி. ஏமாற்றுக்காரனை நம்பி மோசம் போய்விட்டேன். நான் நம்பிவந்தவன் நான் கொண்டு வந்த பொருட்களை எடுத்துக்கொண்டு எங்கோ சென்றுவிட்டான். நான் ஊர் முழுவதும் அலைந்து திரிந்து இப்போது இந்தக் கோயிலில் வந்திருக்கிறேன்”. பேசமுடியாது கஷ்ரப்பட்டாள் அந்தப்பெண்”

“நீ சௌமியாவா…? நாகலிங்கம் சுவாமியார் அதிர்ச்சியுடன் கேட்டார்”

“சௌமியா என்ற வார்த்தையைக் கேட்டதும் மனோகரன் பரபரப்புடன் அங்கு வந்தான்”.

“சுவாமி நான் ஏமாந்திட்டன். பொய்யான ஒருவனை மெய்யானவன் என்றெண்ணி ஏமாந்திட்டன்” விம்மி விம்மி அழுதாள்”

“இவளா சௌமியா…? இவளின் உடலில் படர்ந்திருந்த அந்த அபூர்வ அழகெங்கே போனது. போதையூட்டிய அந்த அழகான சிவந்த உதடுகள் இன்று வெடித்து வீங்கியிருக்கின்றனவே. அழகிய பளபளப்பான முகம் விகாரமடைந்து பார்க்கப் பயத்தைக் கொடுக்கிறது. இவளைக் காண எனக்கு அருவருப்பாக இருக்கு. சிறுபிள்ளைகள் பார்த்தால் பயப்படுவார்கள். சிலருக்குப் பயத்தால் நோயும்

பிடித்துவிடும்'' என்னிடம் பணம் பெற்ற சிவபாலன் இவளைச் சந்திக்கவில்லையா?'' என்று யோசித்துக்கொண்டிருந்தான் மனோகரன்''.

''சுவாமி அவர் என்னை விட்டுவிட்டுச் சென்ற பின்பு ஊருக்கு வரவிரும்பினேன். ஆனால் ஊரவரும், எனது பெற்றோரும், இனத்தவர்களும் என்னை இகழ்வார்கள் என்று நினைத்து ஊருக்கு வரும் நினைவைக் கைவிட்டேன். எனது பெற்றோர் சுகமாக இருக்கிறார்களா...?'' என்று கேட்டாள் சௌமியா''.

''அப்போ சிவபாலன் என்னிடம் பொய் சொல்லியா பணம் பெற்றான். அவன் தனக்குத்தேவை என்று கேட்டிருந்தால் அள்ளிக்கொடுத்திருப்பேனே. இப்படி ஏமாற்றிப் பணம் பெறவேண்டுமா? என்று நினைத்தான் மனோகரன்''.

''மனோகரன் நீண்ட தாடியுடனும் மீசையுடனும் நின்றதால் அவளால் அவனை அடையாளம் கண்டுகொள்ள முடியவில்லை. அவனும் தன்னை யாரென்று சொல்ல விரும்பவில்லை. ஒரு கட்டுப் பணத்தை எடுத்து அவளின் அருகே போட்டுவிட்டுப் புறப்பட்டான்''

''மன்னா, மெய்யான தர்மபாலனின் கூற்றை பொய்யானதென்றும், பொய்யான சிவபானனின் வார்த்தைகளை உண்மையானதென்றும் நம்பியதால் தான் மனோகரனுக்கு இந்த நிலை உண்டானது. மனித உடல் பொய்யானது. அழகு நிரந்தரமற்றது. பணம் அழிந்து போகத்தக்கது என்றார் சுவாமி''..

“சுவாமி, அப்படியானால் மாயையால் பீடிக்கப்படாதவர்கள் எவரும் இல்லையா…?”

சுவாமியார் சிரித்தார்; “மன்னா, எதுவெல்லாம் மனிதனின் சிந்தனைகளை மறைக்கின்றனவோ அவை யாவும் மாயை என்று சொல்லப்படுகின்றது. நாகலிங்கம் சுவாமிகள் கால்நடையாகத் திருத்தலங்களுக்குச் சென்று வந்தார். மனோகரன் ஆச்சிரமத்திற்கு வந்த பின்பு அவனது ஆடம்பர வாகனத்தில் திருத்தலங்களுக்குச் சென்று வந்தார். சௌமியாவைப் பார்த்த பின்பு மனோகரன் உலகைப் புரிந்து கொண்டான். அதனால் அவன் உண்மையான அன்பைப் பற்றித் தெரிந்து கொண்டான். அதனால் அவன் தர்மபாலனின் நட்பை விரும்பினான். பெற்றோரின் விருப்பத்திற்கிணங்க அவர்கள் பார்த்து முடிவெடுத்த பெண்ணைத் திருமணம் செய்து அறவாழ்வு வாழத்தொடங்கினான். அதன் பின் அவன் ஆச்சிரமத்திற்குச் செல்வதில்லை. அதனால் நாகலிங்கம் சுவாமியார் கவலைப்பட்டார். கவலை ஆத்திரமாக மாறியது. அதனால் அவனைப் பற்றிக் கேவலமாகக் கதைத்தார். பற்றுத்தான் மாயை. பற்று ஒரு விடயத்தில் வந்தாலும் அதற்குப் பல விடயங்கள் தேவைப்படும். அதனால் பாவங்கள் அதிகரிக்கும். எதிலும் பற்றில்லாமல் வாழ்பவன் மாயையால் பீடிக்கப்படமாட்டான். அப்படியான ஞானிகள் உலகில் இலட்சத்தில் ஒருவர் கூட இல்லை”.

“மன்னா, வேலூர் மன்னன் முனிவர்கள், ஞானிகளைக் கண்டால் தனது கடமைகள் யாவற்றையும்

மறந்து விடுவான். மன்னனின் இந்தப் பலவீனத்தை அறிந்த பலர் மன்னனை ஏமாற்றிச் சுகபோக வாழ்வு வாழ்ந்து வந்தனர். இது முதலமைச்சருக்கு வெறுப்பைக் கொடுத்தது. முனிவர்களுக்குப் பாடங்கற்பித்து மன்னனைத் திருத்த விரும்பினார்''

''ஒரு நாள் முதலமைச்சர் மன்னனை அந்தப்புரத்தில் சந்தித்துச் சொன்னார்; ''மன்னா, பற்றில்லாதவர்கள் தான் முனிவர்கள். எமது அரண்மனையில் தங்கியுள்ள பலர் போலிச்சுவாமிகள்''

''அப்படியா, அதை நிரூபி'' என்றான் மன்னன்''

''அன்று மன்னன் முனிவர்களையும், ஞானிகளையும் தனிமையில் சந்தித்து ஆசிபெற விரும்புவதாக முதலமைச்சர் அறிவித்தார். அதன்படி ஒவ்வொரு முனிவரும் மன்னனுக்கு ஆசி வழங்கவென வந்தனர்''.

''முதலாவதாக வந்த முனிவரின் பாதங்களைத் தொட்டு வணங்கினான் மன்னன்.''

''மன்னா, சகல சௌபாக்கியங்களும் உனக்கு உண்டாகட்டும். அயலில் உள்ள நாடுகளையெல்லாம் கைப்பற்றிப் பேரரசனாக வாழக்கடைவாய்'' என்று வாழ்த்தினார் முனிவர்''.

''மன்னன் மகிழ்வுடன் சிரித்தான். பின்; ''முனிவரே, உலகை வென்றவரே, மகதநாட்டிலிருந்து அபூர்வமான கனியொன்றை எமது வீரர்கள் கொண்டு வந்துள்ளனர். அதை உண்பவர்கள் நெடுங்காலம்

ஆரோக்கியமாக வாழ்வார்கள். அது இது தான்'' எனக்கூறி ஒருகனியைப் பொன்னாலான தட்டில் வைத்துக் கொடுத்தான் மன்னன்''

''முனிவர் மகிழ்வுடன் அதைப் பெற்று உண்டார். பின், ''இப்படியான சுவை மிக்க கனியை நான் இதுவரை உண்டதில்லை. அமிழ்தைவிடச் சுவையானது'' என்று கூறினார்''.

''முனிவர் சென்றதும் முதலமைச்சர் சொன்னார்; மன்னா, முனிவர்களுக்குப் பற்றிருத்தல் கூடாது. உமது தந்தையாருக்கு யோகர் சுவாமிகள் அடிக்கடி அரிய உணவுப்பண்டங்களைக் கொண்டுவந்து கொடுப்பார். உனது தந்தை அவரை உண்ணுமாறு வற்புறுத்துவார். ஆனால் யோகர் சுவாமிகள் உண்ண மாட்டார்; ''மன்னா, பற்றுக்களை அறுத்த எனக்குப் பற்றுக்களை உண்டாக்காதே. அவை தான் எல்லாப் பாவங்களுக்கும் மூலகர்த்தா. சுவையான உணவை உண்டு களித்த நா எந்நாளும் சுவையைத் தேடியபடியே இருக்கும். அந்த நினைவுகள் இறைவனை நினைக்க விடாது. இறைவனை அடைய நினைக்கும் ஞானி சுவையான உணவு வகைகளை உண்ணக்கூடாது. தனது ஆன்மாவைப் பாதுகாக்கும் உடலுக்குச் சக்தியைக் கொடுக்கக்கூடிய உணவுகளையே உண்ண வேண்டும். உப்பு, புளி, காரம், இனிப்பு என்பவற்றை ஞானி உண்ணக்கூடாது. எனது பக்தர்கள் அன்போடு தரும் விசேட உணவுகளை நான் உனக்குத் தருகிறேன். அதற்குப் பல காரணங்கள் உண்டு. உனது நாட்டு மக்களின் செல்வம் செல்வாக்கை அது உணர்த்துகிறது. மகிழ்ச்சியாக வாழ்பவன்

தான் சுவையான உணவுகளைத் தயாரிப்பான்; அதை விருப்புடன் மற்றவர்களுக்குக் கொடுப்பான். இப்படிச் சொல்லிக்கொண்டே போகலாம் என்பார்''.

''ஆனால், இப்போது வந்த முனிவர் நாம் சாதாரனமான மாங்கனியை எடுத்துத் தேனிலும் நெய்யிலும் ஊறவைத்து கருப்பஞ்சாற்றில் கற்கண்டிட்டுக் கொடுத்ததை அபூர்வமானது அமிழ்தம் போன்றது என்று கூறிவிட்டுச் செல்கிறார். அமிழ்தை இவர் புசித்தவரா…? அமிழ்து என்ற வார்த்தையைச் சாதாரண குடிமகன் சொன்னால் அதை ஏற்றுக்கொள்ளலாம். முற்றும் துறந்த ஞானி என்று சொல்வோர் சொன்னால் ஏற்கலாமா…?. அத்துடன் ஒரு முனிவன் தனக்குக் கிடைத்தவற்றை மற்றவர்கள் பார்த்துக்கொண்டிருக்க உண்ணமாட்டான். ஒப்புக்காவது; நீங்களும் உண்ணுங்கள் என்று கேட்பான். ஆனால் வந்தவன் கேட்கவில்லை. இதிலிருந்து என்ன தெரிகிறது மன்னா..? வந்தவன் இங்கு வயிற்றை நிரப்புவதற்காகவே வந்திருக்கின்றான்''.

''மன்னர் அதை ஒப்புக்கொண்டார். அடுத்த முனிவர் வந்தார். அவர் வரும்போது மிகவும் அழகான பெண்கள் இருவர் மன்னனுக்குச் சாமரை வீசிக்கொண்டிருந்தனர். அவர்கள் மிகவும் அழகான சேலையும், கவர்ச்சியான மார்புக் கச்சையும் அணிந்திருந்தனர். அவர்களது பார்வையில் மோகம் கொப்பளித்தது. அளவெடுத்துச் செதுக்கப்பட்ட பல்லவர் காலத்துக் கற்சிற்பங்கள் இரண்டு உயிர்பெற்று வந்து மன்னனுக்குச் சாமரை வீசிக்கொண்டிருப்பதைப் போலிருந்தது''.

“மன்னன் முனிவரின் பாதங்களைப் பணிந்தான்; “மங்களம் உண்டாகட்டும்” என்று வாழ்த்தியவாறு முனிவர் ஆசனத்தில் அமர்ந்தார். அவரது கண்கள் அந்தச் சிற்பங்களை நோக்கி அடிக்கடி திரும்பின. மனம் இலேசாகி வானில் பறந்தது”.

“சுவாமி, நான் வேலூரின் மீது படையெடுக்கத் தீர்மானித்துள்ளேன். இதில் எனக்கு வெற்றி கிடைக்குமா?” மன்னன் கேட்டான்”.

“முனிவரை அந்த இரு பெண்களின் அழகு கவர்ந்தமையால் மன்னன் கேட்டது அவருக்கு விளங்கவில்லை; “என்ன மன்னா கேட்டீர்கள்?” தடுமாறினார் முனிவர்”.

“நானும் பட்டத்தரசியும் வேலூருக்குச் செல்ல விரும்புகிறோம். வேலூர் இளவரசனை இராசகுமாரிக்கு வரன் கேட்கப் போகிறேன். அதற்குப் புறப்பட நல்ல நாளாகப் பார்த்துச் சொல்லுங்கள்” என்றான் மன்னன்”.

“முனிவர் சிறிது நேரம் கண்களை மூடித் தியானத்தில் இருந்தார். பின் சொன்னார்; “மன்னா, இராசகுமாரியின் கிரகநிலை நன்றாக இல்லை. அவளுக்கு அட்டமத்தில் சனிபகவான் இருக்கிறார். அவர் அடுத்த மாதம் பதினைந்தாம் திகதி ஒன்பதாவது வீட்டிற்குச் செல்கிறார். அதன் பின் வரும் பௌர்ணமி தினத்தன்று சென்று கேளுங்கள்” என்றார் முனிவர். பின் சிறிது நேரம் முனிவர் மன்னனுடன் பேசிவிட்டுச் சென்றார்”.

“மன்னா, வந்த நேரம் முதல் முனிவனின் மனமும் கண்களும் தங்களுக்குச் சாமரை வீசிய பெண்களின் மீதே லயித்திருந்ததைத் தாங்கள் அவதானித்திருப்பீர்கள். காமமுடையவர்கள் ஒருபோதும் ஞானிகளாகமாட்டார்கள். மன்னா, யாரும் ஒரு கணப்பொழுதேனும் செயலாற்றாமல் இருந்ததில்லை. பிரகிருதியான மாயையில் இருந்து உதித்த குணங்களால் ஒவ்வொரு உயிரும் தன் வயமின்றிக்கருமமாற்றிக் கொண்டிருக்கும். ஆனால் பக்குவப்பட்ட ஆன்மா கர்மேந்திரியங்களை அடக்குவது போல இந்திரியங்களையும் அடக்கியிருத்தல் வேண்டும்”.

“முனிவனென்று வந்தவன் கர்மேந்திரியங்களை அடக்கிவிட்டவனைப் போல நடித்து, இந்திரிய விஷயங்களை மனத்தால் எண்ணிக்கொண்டும் அனுபவித்துக் கொண்டும் இருந்தான். இந்திரியங்களை மனதால் அடக்கிப் பற்றற்று, கர்மேந்திரியங்களைக் கொண்டு கர்மயோகம் செய்பவனே முனிவன் என்று நாம் அறியாதவர்கள் என்பது அவனது நோக்காக இருந்தது. அத்துடன் வேலூரின் மீது போர் தொடுக்க நாள் குறித்துத்தரும்படி கேட்டீர்கள். அதை அந்த முனிவர் விளங்கிக் கொள்ளவில்லை. ஆதனால் தான் பின்னர் நீங்கள் வேலூர் இளவரசனுக்கு எமது இளவரசியைத் திருமணம் பேசுவதற்குச் செல்ல உகந்த நாளைக் குறித்துத் தரும்படி கேட்டதற்கு அவர் ஏதேதோ பேசினார். வேலூர் அரசனுக்கும் எமக்கும் உள்ள தீராத பகையை அறிந்து கொள்ளாத அவர் ஒரு முனிவரா…?” என்று கேட்டார் முதலமைச்சர்”.

“அடுத்து மிகவும் வயது சென்ற ஒரு முனிவர் தள்ளாடியபடி வந்தார். மன்னன் அவரைஆதரவாக அணைத்து ஆசனத்திலிருத்தி அவரது பாதங்களைப் பணிந்தான். அவரது முகத்தில் துயரம் படிந்திருந்தது. அதை உணர்ந்து கொண்ட மன்னன் கேட்டான்; “சுவாமி, தங்களுக்கேதாவது குறையிருக்கா? அடியேன் அதைத் தீர்க்காது விட்டுவிட்டேனா?”

“மன்னா, உனது வீரர்கள் வயதிற்கு மதிப்புக் கொடுப்பதில்லை. அத்துடன் பழுத்த ஞானப்பழமான என்னை முதலில் உன்னைச் சந்திக்க விடாதது பெருங்குற்றம்”.

“உண்மை தான் சுவாமி, அதை மன்னித்தருளுங்கள். நான் அந்த வீரர்களுக்கு உரிய தண்டனை வழங்குகிறேன்” என்றான் மன்னன்”

“முனிவர் திருப்தியடையவில்லை. “முனிவர்களின் தன்மையை உணர்ந்துகொள்ள முடியாத மூடர்களின் கட்டளையாகத் தான் இது இருத்தல் வேண்டும். எனவே இதற்கான கட்டளையிட்டவர்களைத் தான் தண்டித்தல் வேண்டும்” என்றார் முனிவர்”.

“முதலமைச்சருக்கு அந்த வயதுமுதிர்ந்த முனிவரைப் பிடிப்பதேயில்லை. அவர் வீரர்களை மதிக்காது அவர்களை தனது அடிமைகளாகக் கருதி அவர்களிடம் வேலை வாங்கிக்கொண்டிருந்தார். முனிவர்களென்றால் காட்டில் பன்னசாலை அமைத்து தவம்வேண்டியவர்கள். எப்போதாவது ஒரு தடவை அரண்மனைக்கு வந்து மன்னனுக்கு ஆசி வழங்கிச் செல்லவேண்டியவர்கள். ஆனால் இந்த முனிவர்கள்

அரண்மனையில் தங்கியிருந்து சுகபோக வாழ்வை அனுபவிப்பதோடு தொல்லைகளும் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அதனால் அவரையும் அவரது கூட்டத்தையும் அரண்மனையை விட்டு வெளியேற்றவே முதலமைச்சர் இந்த நாடகமாடினார் ஏற்கனவே பிரச்சினைப்பட்ட அந்த முனிவர் அரசனுக்கு அதை மறைமுகமாகத் தெரிவித்தார்''

''வயது முதிர்ந்த முனிவர் சென்றதும் முதலமைச்சர் அடுத்த முனிவரை அழைக்க ஆயத்தம் செய்தார். அதை உணர்ந்த மன்னன் சொன்னான்; ''முதலமைச்சரே, இனி எந்த முனிவரையும் அழைக்க வேண்டாம். நான் உண்மையை உணர்ந்து கொண்டேன். அவர்களை மடங்களுக்கு அனுப்புங்கள். கோயில்களில் தங்கியிருந்து மக்களுக்கு ஆசி வழங்கட்டும். எக்காரணம் கொண்டும் எந்த முனிவரையும் அரண்மனையில் தங்க நான் அனுமதிக்கமாட்டேன்'' என்றான் மன்னன்''.

''சுவாமி, அப்படியானால் மாயையைவிட்டு நீங்கியவர்கள் யாருமில்லையா..?'' மன்னன் கேட்டான்.

''மன்னா, எவனது கர்மங்கள் எல்லாம் ஆசையும் சங்கற்பமும் அற்றனவோ, எவனது கர்மங்கள் ஞானத்தீயால் எரிக்கப்பட்டனவோ அவன் மாயையால் பீடிக்கப்பட மாட்டான்''.

''வினைப் பயனில் பற்றற்றவனாய், நித்திய திருப்தி உடையவனாய், எதையும் சாராதவனாய் இருப்பவன் எந்தக் கருமத்தில் ஈடுபட்டாலும் அவன் கர்மம்

செய்தவனாகமாட்டான். கர்மத்தைத் தான் செய்வதாக நினைத்தால் மாயை அவனைப் பற்றிப் பிடித்துவிடும்''.

''ஆசைகள் இல்லாதவன், மனதையும் உடலையும் கல்லாக்கியவன், உடைமைகளைத் துறந்தவன், உடலால் மட்டும் செயலாற்றுபவன் பாவத்தைச் செய்வதில்லை. அதனால் அவனை மாயை பிணிக்காது''.

''மன்னா, எப்பொழுதெல்லாம் அறம் அழிந்து போய் மறம் மேலோங்குகிறதோ, அப்பொழுதெல்லாம் கடவுள் தன்னைப் பிறப்பித்துக் கொள்வார். அப்படிப் பிறப்பித்து நல்லவர்களைக் காப்பார்; கெட்டவர்களை அழிப்பார்; தர்மத்தை நிலைநிறுத்துவார்''.

''கர்மம் எது, அகர்மம் எது என்பதில் ஞானிகள் கூடத் தடுமாற்றம் அடைகின்றனர். எதைக் கர்மம் என்று அறிந்து அதைப் பற்றின்றி உடலால் செய்கின்றவனை மாயை பிடிக்காது''.

''கர்மத்தின் தன்மையைத் தெரிந்துகொள்ளல் வேண்டும். செய்யத் தகாத கர்மங்கள் எவையெவையெனத் தெரிந்து கொள்ளல் வேண்டும். கர்மத்தைக் கடந்த நிலையையும் தெரிந்து கொள்ளல் வேண்டும். அப்படித் தெரிந்து கொள்வது அரிதானது'' என்றார் நமசிவாயம் சுவாமிகள்.

''அப்படியானவர்கள் யாராவது வாழ்கிறார்களா..? வாழ்ந்திருந்தால் அடியேனுக்கு அதைக் கூறுங்கள் சுவாமி'' மன்னன் கேட்டான்.

“மன்னா, இரவில் ஆகாயத்தில் எத்தனையாயிரம் தாரகைகள் தென்படுகின்றன. ஆனால் விடிந்ததும் அவை எங்கே சென்றன? ஆகாயத்தில் தான் இருக்கின்றன. அவற்றைப் பார்க்க முடியாதுள்ளது. அது போலத்தான் பூமியில் கர்மபலன்களை ஞானத்தீயால் எரித்துவிட்டு எதிலும் பற்றில்லாமல் பலர் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களை நாம் தேடிக்கண்டு பிடித்தல் வேண்டும். அப்படியானவர்கள் தமது மனத்தையும் ஆத்மாவையும் ஈஸ்வரனுக்குப் பூரணமாக அர்ப்பணஞ் செய்துவிட்டுச் சர்வகாலமும் ஈஸ்வரனைப் பற்றியே சிந்தித்துக் கொண்டிருப்பார்கள். தான் வணங்கும் ஈஸ்வரன் எல்லா உயிர்களிடத்தும் இருக்கிறார் என்பதை உணர்ந்து அவ்வுயிர்களுக்குத் தொண்டு செய்வார்கள். அவர்களுக்கு எதிலும் நாட்டமிராது. ஆன்மாவுக்காக உண்பார்கள்; ஆன்மாவுக்காக உடுப்பார்கள். ஆன்மாவுக்காக செயல்களைப் புரிவார்கள். அவர்கள் ஆன்மாவுக்காக வாழ்விலும் அவர்கள் பற்றுக் கொள்வதில்லை.

“யாருக்கும் தெரியாமல் ஒரு விடயத்தைச் செய்தாலும் இறைவன் அதை அறிந்து கொள்வான் என்று நினைப்பவன் பாவம் செய்ய அஞ்சுவான். யாருமில்லாத இடத்தில் அழகான கன்னிப் பெண்களைக் கண்டும் அவளை இச்சிக்காதும், காம உணர்வுகளோடு அவளைப் பார்க்காமலும் யார் இருக்கிறானோ அவன் பற்றுக்களற்ற சாது என்று கொள்ளல் வேண்டும். பொன் பொருள் யாவும் குவிக்கப்பட்டிருந்தும் அவற்றில் நாட்டமில்லாது இருப்பவன்

தர்மவான். சலசலப்புகளுக்காட்படாது, புகழை விரும்பாது, தான் தான் கருத்தா என்பதை உணராது வாழ்பவன் புண்ணியவான். வீண்பெருமைகளுடனும், படாடோபத்துடனும் செய்யும் செயல்களெல்லாம் போலியானவை என்று உணர்ந்து கொள்பவன் தான் ஞானி. இப்படியான பலர் முன்பு வாழ்ந்தனர். இப்பொழுதும் வாழ்ந்துகொண்டிருக்கின்றனர்.''

''அரிச்சந்திரன் என்ற மன்னனின் வரலாற்றை நீ அறிந்திருப்பாய். உண்மையைத் தவிர எதையும் பேசமாட்டேன் என்று வாழ்ந்தவன் அரிச்சந்திரன். அவன் வாய்மை தவறாதவன் என்பதை நிரூபிப்பதற்காக வசிட்ட முனிவர் அவனுக்கு எத்தனை கொடுமைகளைச் செய்தார். அவன் அவற்றையெல்லாம் தாங்கிக்கொண்டானே தவிர வாய்மை தவறவேண்டும் என்று மனதாற்கூட நினைக்கவில்லை. இறுதியாகத் தனது மனைவியைச் சிரச்சேதம் செய்த போதும் கூட அவன் வருந்தவில்லை. தெய்வங்களை உதவி செய்யுமாறு அவன் கோரவில்லை. மனிதர்கள் சிறுசிறு துன்பங்கள் வந்தாலே அவற்றைத் தாங்க முடியாது தெய்வங்களிடம் முறையிடுகின்றனர். நாட்டை இழந்து, மகனை இழந்து, இறுதியாகத் தனது மனைவியைச் சிரச்சேதம் செய்யவேண்டிய நிலை ஏற்பட்ட போதும் அவன் கலங்கவில்லை''.

''இது தான் பற்றற்ற நிலை. அடுத்து என்ன நிகழும் என்ற சிந்தனை சிறிதும் இல்லாமல் எவனொருவன் எல்லாம் இறைவனால் தரப்பட்டவை என்று நினைத்துச் செயலாற்றுகிறானோ, அவன் உலகப் பற்றை முற்றிலும்

விட்டொழித்தவனாவான். சர்வகாலமும் ஈஸ்வரனையே சிந்தித்துக்கொண்டு அவனது திவ்விய பிரேமையைத் தனக்குள் உண்டாக்கிக் கொண்டு கருமமாற்றுபவன் உலகத்தில் உள்ள எப்பொருட்களையும் தன்னுடைய பொருளாகக்க கருதமாட்டான். தன்னைச் சேர்ந்தவர்கள் என்று கருதும் பெற்றோர், மனைவி, பிள்ளைகள், உற்றார், உறவினர்கள் யாபேரும் எப்பொழுதோ ஒரு நாள் தன்னைவிட்டுப் பிரிந்துவிடுவார்கள் என்று நினைப்பவன் அவர்களின் பிரிவுக்காகத் துன்பப்படமாட்டான். இறைவன் மட்டும் தான் தனக்குச் சொந்தமானவன் என்று நினைப்பவன் பற்றுக்கள் அற்றவன். இந்த வகையில் தான் நாம் அரிச்சந்திரனை எடுத்துக்கொள்ளல் வேண்டும்''

''எல்லாம் இறைவன் தருவான்; இறைவனது ஆணைக்கு மேலே எதுவும் இல்லை என்று புரிந்தமையால் தான் சர்வ வல்லமை பொருந்திய முனிவர்களாற் கூட அரிச்சந்திரனின் மனதை மாற்ற முடியவில்லை''

''இப்படி இதிகாச புராணங்களில் பலர் வாழ்ந்துள்ளனர். சேதி நாட்டிலே உள்ள திருக்கோவலூரின் அரசர் மெய்ப்பொருள் நாயனார். இவர் சிவனடியார்களின் திருவேடத்தை மெய்ப்பொருளென நினைத்து வணங்கிப் போற்றுவார்''.

''முத்தன் என்பவன் ஒரு சிற்றரசன். பலமுறை மெய்ப்பொருள் நாயனாரோடு போர் தொடுத்துப் படுதோல்வி அடைந்தவன். போர் செய்து மெய்ப்பொருள் நாயனாரை வெற்றி கொள்ள முடியாதென்பதை உணர்ந்த முத்தன் சிவவேடம்

தாங்கித் தனது உடைவாளை இடையிலே மறைத்து வைத்துக்கொண்டு மெய்ப்பொருள் நாயனாரின் அரண்மனைக்கு வந்தான்''

''வந்தவன் போலிவேடதாரி என்பதை உணராத வாயிற் காப்போர் அவனை வணங்கி மெய்ப்பொருள் நாயனாரிடம் அவனை அழைத்து வந்தனர்''

''மெய்ப்பொருள் நாயனார் சிவனடியார் போல வந்த முத்தனைச் சிவனென நினைத்து வணங்கினார். முத்தன் தருணம் பார்த்து மெய்ப்பொருள் நாயனாரைக் கொன்றான். இருப்பினும் மெய்ப்பொருள் நாயனாரின் வேண்டுதலின் பேரில் அவன் விடுவிக்கப்பட்டான்''.

''இதைவிடச் சிறுதொண்டர் நாயனாரின் மகனை அரிந்து கறி செய்து தரும்படி சிவனடியார் வேடத்தில் வந்த சிவபெருமான் கேட்டார். சிறுதொண்டர் பாடசாலைக்குச் சென்ற தனது மகனை அழைத்து வந்து மனைவியோடு சேர்ந்து தனது மகனை வெட்டிக் கறிசமைத்துக் கொடுத்தார்''

''வரலாற்றை எடுத்து நோக்கினால் இப்படி எத்தனையோ சம்பவங்களைச் சொல்லாம்.''

''இன்றும் இப்படியானவர்கள் வாழ்கிறார்கள். நல்லவர் ஒருவர் இருந்தால் அவருக்காக வானம் இரங்கி மழை பெய்வது போல இப்படியான ஒரு சிலர் வாழ்வதால் தான் உலகம் இயங்குகின்றது''.

''மன்னா, குளத்துமேடு என்ற ஊரில் வாசுதேவன் என்றொரு குடியானவன் இருந்தான். அவன் தனது

வேலைகளைச் சரிவரச் செய்வான். தன்னுடன் பழகுபவர்களுக்கு ஆலோசனைகள் கூறுவான். அதன்படி காரியங்கள் யாவும் நடைபெறும். அதனால் அவனைக் கேளாது அவனது நண்பர்கள் எவரும் எச்செயலையும் செய்வதில்லை. பின் அவ்வூரவர்கள் அவனது பெருமையை அறிந்து அவனிடம் ஆலோசனைகளைப் பெற்று வந்தனர். அவனது பெருமை அயல் ஊர்களிலும் பரவியது. அதனால் அவனது வீட்டில் மக்கள் குவியத்தொடங்கினர். அந்த ஊரில் ஒரு ஞானி இருந்தார். அந்த ஞானியிடம் தான் மக்கள் ஆலோசனைகளைப் பெற்று வந்தனர். அதற்காக அவர் பொருட்களையும் பணத்தையும் தட்சனையாகப் பெற்று வந்தார். வாசுதேவன் எவரிடமும் எதையும் பெறுவதில்லை. ஆரம்பத்தில் ஞானிக்கு வந்த வருமானம் படிப்படியாகக் குறைந்து முற்றாக அற்றுப்போய்விட்டது. அதனால் அவர் வாசுதேவனைப் பழிவாங்க நினைத்தார்''

''மன்னா, பயன் கருதாது கர்மம் செய்பவன், மனம் தெளிவடைந்தவன், இந்திரியங்களை அடக்கியவன், தனது ஆத்மாவே உயிரனைத்திற்கும் ஆன்மா எனக் கருதியவன், கர்மத்தால் கட்டுண்டதில்லை. இப்படியானவன் பார்க்கினும், கேட்கினும், உறங்கினும், சுவாசிப்பினும், பேசினும், கழிக்கினும், பிடிக்கினும், கண்திறக்கினும், கண்மூடினும் பொறிகள் புலன்களில் போகின்றனவென்று உறுதிகொண்டு; ''நான் எதையும் செய்வதில்லை'' என்றே நினைப்பான்''.

“மேற்கூறிய போக்குடைய வாசுதேவன் மக்களின் நலன் கருதி கர்மம் செய்து வந்தான். ஆனால் அவ்வூரில் வாழ்ந்த ஞானியோ தான்தான் அனைத்திற்கும் கர்த்தா என்று நினைத்து ஊரில் கூலிக்காகப் பாவச்செயல்களில் ஈடுபடும் பலரின் உதவியுடன் வாசுதேவனுக்கு கெடுதல்கள் பலவும் செய்து வந்தான்”

“அவ்வூரில் நாகநாதன் என்றொரு புலையன் வாழ்ந்து வந்தான். அவன் கர்ப்பமுற்ற பசுக்களையும் களவெடுத்துக் கொன்று அதன் மாமிசத்தை விற்று வருபவன். அவனை அழைத்துப் பொருட்களைக் கொடுத்து அந்த ஞானி, அவனிடம் உணவைக் கொடுத்து அவ் உணவை வாசுதேவனுக்குக் கொடுத்து அவனை உண்ணுமாறு கேட்கச் சொன்னான்”

“நாகநாதன் உணவைப் பெற்றுக்கொண்டு வாசுதேவனின் வீட்டுக்கு வந்தான். வாசுதேவனது வீட்டில் ஊரவர்களும் அயலவர்களும் கூடியிருந்தனர். நாகநாதன் வாசுதேவனுக்கு அருகில் வந்து; “சுவாமி, தாங்கள் பற்றற்றவர், சிவனுடன் பேசுபவர் என்றெல்லாம் மக்கள் பேசிக்கொள்கிறார்கள். நீர் பேசும் சிவனை எனக்குக் காட்டும்” என்றான்”.

“வாசுதேவன் எதுவும் பேசவில்லை. அதனால் நாகநாதன் சொன்னான்; “நீங்கள் கடவுளின் பெயரால் பிழைப்பு நடத்துகிறீர்கள். கடவுள் மனிதர்கள் எல்லோரையும் சமமாகவே படைத்துள்ளார் என்று நீங்கள் பிரசாரம் செய்கிறீர்கள். அப்படிப்

பார்த்தால் நாமிருவரும் ஒருவர் தான். எம்மிடம் எந்த வேறுபாடும் இல்லை. அதனால் புலையனான நான் சமைத்து வந்த இந்த உணவைத் தாங்கள் உண்ணவேண்டும்'' என்றான்.

''மன்னா, மனதைச் சமநிலைப் படுத்தியவர்களால் இம்மையிலேயே இயற்கை வெல்லப்படுகிறது. திருவருளை அறிந்தவன் திருவருளில் நிலைபெற்றவன், உறுதியான அறிவை உடையவன். மனக்குழப்பமடையாதவன், பிரியமானவற்றைப் பெற்ற பொழுதும் இன்பமடைவதில்லை. அதுபோலப் பிரியமில்லாதவற்றைப் பெறும் போதும் துன்பம் அடைவதில்லை''. ஆரியாதகை என்ற ஊரில் வசித்து வந்த கிருஷ்ணகிசோர் என்ற பெரியார் ஒருமுறை பிருந்தாவனத்திற்குத் தீர்த்த யாத்திரை சென்றார். நடந்து செல்லும் போது ஒரு நாள் தாகமேலீட்டால் ஒரு கிணற்றின் அருகே நின்ற ஒருவனிடம் தண்ணீர் தரும்படி கேட்டார். அவன் கிருஷ்ணகிசோரைப் பார்த்தான். அவர் பெரியதொரு ஞானிபோல அவனுக்குத் தென்பட்டார். அதனால் அவன்; ''பிராமணரே, இது தாழ்ந்த சாதிக்காரர்கள் நீர் எடுக்கும் கிணறு. அத்துடன் நான் தாழ்ந்த சாதிக்காரன். அதனால் உங்களுக்கு இக்கிணற்றிலிருந்து நீர் முகந்து கொடுக்க அருகதையற்றவன்'' என்றான்'' அப்பொழுது கிருஷ்ணகிசோர் சொன்னார்; ''மகனே, பகவான் கிருஷ்ணனது நாமத்தைச் சொல்பவர்கள் பரிசுத்தனாகி விடுவார்கள். நீ பகவான் கிருஷ்ணனது நாமத்தைச் செபித்தபடி கிணற்றில் நீர் முகந்துதா'' என்றார். அதன் படி அந்த மனிதன் பகவானின்

நாமத்தை உச்சரித்தபடி நீர் முகந்து கொடுத்தான். கிருஷ்ணகிசோர் நீரை அருந்திவிட்டுக் கமண்டலத்திலும் நீரை நிரப்பிக்கொண்டு சென்றார். அந்தக் கதை வாசுதேவனுக்கு நினைவில் வந்தது''.

''இறைவனின் நாமத்தை உச்சரிப்பவர்கள் பரிசுத்தராகி விடுவார்கள். அவர்களிடம் களங்கமில்லாத விசுவாசமும், ஈஸ்வர பக்தியும் இருக்கும் என்று நினைத்தவாறு நாகநாதனைப் பார்த்துச் சொன்னார்; ''நாகநாதா, நான் சிவனடியார்கள் தரும் பிச்சையை ஏற்று உண்பது வழக்கம். நீ வீட்டுக்குச் சென்று குளித்து விபூதி அணிந்து சிவனின் நாமத்தைச் சொல்லிக்கொண்டு உணவைத்தா. நானும் எனது சீடர்களும் உண்கிறோம்'' என்றான்''.

''நாகநாதன் இப்பதிலை எதிர்பார்க்கவில்லை. திகைத்துப் போய் நின்றான். அதனால் வாசுதேவன் சொன்னான்; ''ஆன்ம ஞானம் உண்டானால் சகல பற்றுக்களும் அற்றுப்போய்விடும். அதன் பின் உயர்ந்தவன் தாழ்ந்தவன், சாதிமான், கீழ்ச்சாதிக்காரன், பணக்காரர், ஏழை, மன்னன், குடிமகன் என்ற வித்தியாசம் தோன்றாது. அதனால் சிவனடியனாக வா'' என்றான்''.

''நாகநாதன் வீட்டுக்குச் சென்று குளித்து விபூதி தரித்து உணவுடன் வந்தான். அவன் கொண்டு வந்த உணவை வாசுதேவன் வாங்கி உண்டான். வாசுதேவன் உண்ணும் போது அவனது சீடர்கள் அருகில் இருந்தனர். ஆனால் அவன் அவர்களுக்கு அந்த உணவைக்

கொடுக்கவில்லை. ஏனென்றால் அவனிடம் உண்ண முடியாத உணவையே அந்த ஞானி கொடுத்திருந்தார். அந்த உணவு பழுதடைந்திருந்தது. அத்துடன் மண்ணும், கல்லும் இருந்தன. சீடர்கள் உண்ணமுடியாதென்று வீசினால் நாகநாதன் கொடுத்த உணவை வீசிவிட்டார்கள் என்று நினைப்பான். அதனால் தான் வாசுதேவன் கொடுக்கவில்லை''.

''நாகநாதனுக்கு அது பழுதடைந்த உண்ணக்கூடாத உணவு என்று தெரியும். வாசுதேவன் உண்ணாவிட்டால் பெரியதொரு குழப்பம் செய்தல் வேண்டும் என்று ஞானி சொல்லியிருந்தார்''

''மகனே, சிவனடியார்களுக்கு உணவு கொடுப்பது சிவனுக்குக் கொடுப்பதைப் போன்றது. ஒரு நாள் வியாசமுனிவர் யமுனை ஆற்றைக் கடந்து செல்ல ஆற்றங்கரைக்கு வந்தார். அப்பொழுது அங்கே பலர் ஆற்றைக் கடப்பதற்காக வந்திருந்தனர். அவர்களுடன் கோபிகா ஸ்திரிகள் பலரும் இருந்தனர். ஆறு கரைபுரண்டோடியது. அதனால் ஓடக்காரர்கள் எவரும் ஓடம் செலுத்தத் தயாராக இருக்கவில்லை''

''கோபிஸ்திரிகள் வியாசரை அணுகி; ''சுவாமி, நாம் விரைவாக அக்கரைக்குச் செல்லவேண்டும். ஆறு உள்ள நிலையில் இப்போதைக்கு யாராலும் அக்கரைக்குச் செல்ல முடியாது. நாம் செல்வதற்கு ஏதாவது வழி இருக்குமா சுவாமி'' என்று இரந்தனர்.

“பயப்படாதீர்கள். நான் உங்களை இப்போதே அக்கரைக்குக் கொண்டு செல்கின்றேன். ஆனால் எனக்குப் பசிக்கிறது. உங்களிடம் தீண்பண்டங்கள் இருந்தால் தாருங்கள் உண்டுவிட்டு அழைத்துச் செல்கின்றேன்” என்றார்”.

“அந்தப் பெண்கள் தாம் கொண்டு வந்த பால், வெண்ணெய், பலகாரங்களை அவருக்குக் கொடுத்தனர். வியாசர் மகிழ்வுடன் வாங்கி உண்டார். பின்பு; “யமுனாதேவி நான் இன்று உபவாசமிருப்பது உண்மையானால் நீ எனக்கும் மறுகரையை அடைய எண்ணும் இவர்களுக்கும் வழிவிடல் வேண்டும்” என்றார். உடனே யமுனா நதியின் நடுவே பிளவு உண்டாகித் தரை தெரிந்தது. அனைவரும் நடந்து சென்று அக்கரையை அடைந்தனர். அவர்கள் கரையை அடைந்ததும் நதியில் உண்டான வழியை நீர் நிரப்பியது. அக்கரையை அடைந்த அனைவரும் வியாசர் வயிறு நிறைய உண்டுவிட்டு உபவாசம் இருப்பதாகக் கூறியதை நினைத்து ஆச்சரியப்பட்டனர். மன்னா, அந்த உணவை உண்டது வியாசரது உடலில் அந்தர்யாமியாக வீற்றிருக்கின்ற இறைவனே தவிர வியாசர் அல்ல. உண்மையான நம்பிக்கையும் தீவிரமான அவாவும் நினைத்ததைச் செய்விக்கும் என்பதை உணர்ந்துகொள்” என்றான் சுவாமியார்”

“நாகநாதனுக்குப் பயம் உண்டானது. அதன் பின் அவன் பக்தனானான். கீழான செயல்களைச் செய்வதை விட்டுவிட்டு வாசுதேவனின் சீடனானான்”.

“கடவுளே கதியென்றிருப்பவர்கள் எதற்கும் அஞ்சமாட்டார்கள். அவர்கள் சிவனை நினைத்துக்கொண்டு தாம் விரும்பியவற்றையெல்லாம் செய்வார்கள். காரியங்கள் யாவும் அவர்கள் நினைத்தபடி நடைபெறும். கடவுளின் நாமத்தை வாயால் சொல்லிக்கொண்டு மனதில் பல்வேறு நினைவுகளுடன் காரியத்தைச் செய்தால் அது நிறைவேறாது. காரியங்கள் செய்து முடிக்கும் வரை எந்த விதமான எண்ணங்களுமின்றி நம்பிக்கையுடன் உச்சரிக்கப்படும் வார்த்தைகள் தான் பயனைத் தரும். மனதில் நினைவுகள் வந்தால் பற்றுக்கள் தோன்றிவிடும். பற்றுக்கள் தோன்றினால் அது இறைவனை நினைப்பவனுடன் தொடர்பு கொள்ள விடமாட்டாது. மன்னா, நீ ஏதாவதொரு செயலைச் செய்ய விரும்பினால் அச்செயலைச் செய்து முடிக்க வல்லவன் ஒருவனிடம் ஒப்படைத்துவிட்டு அச்செயலை மறந்துவிடல் வேண்டும். அவன் அச்செயலைச் செய்வானா செய்யமாட்டானா அவனுக்கு அச்செயலைச் செய்ய வேறு துணைகள் தேவையா என்று நினைத்தால் உனக்கு நிம்மதி இராது அவன் செய்து முடிப்பான் என்று நினைத்தால் நிம்மதியும் மகிழ்வும் உண்டாகும்.”

“பற்றுக்கள் இல்லாதவன் உயிரோடு வாழ்ந்தாலும் அவன் இறந்தவனாகவே கருதப்படுவான். மாயை என்பது நினைவுகளில் இருந்து செயலாவது. பெரும்பாலானவர்கள் காவி தரித்து தனிமையான இடத்தில் பன்னசாலை அமைத்துச் சீடர்களுடன் தங்கியிருப்பவர்கள் ஞானிகள் என்று நினைக்கிறார்கள். இதனால் தான் போலியான

வேடமணிந்த பலர் மக்களால் பெரும் ஞானிகளாகக் கருதப்படுகின்றனர். அந்த வகையானவன் தான் வாசுதேவனை எதிர்த்த ஞானி. புலயனிடம் உணவைக் கொடுத்தனுப்பிய போது அதை வாசுதேவன் வாங்கி உண்ண மாட்டான் என்றே அந்த ஞானி கருதினார். ஆனால் வாசுதேவன் அவ்வுணவைச் சிவனின் நாமத்தைச் சொல்லியவாறு தந்தால் உண்பேன் என்று கூற அப்புலையன் குளித்து நீறணிந்து சிவநாமத்தைக் கூறியபடி கொடுத்தான். வாசுதேவன் அதைப் பெற்று உண்டதும் அவன் சிவபக்தனாகிவிட்டான். அத்துடன் நாளுக்கு நாள் வாசுதேவனின் புகழ் மேலோங்கிக்கொண்டிருந்தது. இது அந்த ஞானிக்குப் பொறுக்கவில்லை''.

''அவரது சீடர்களாகப் பெண்களும் இருந்தனர். அவரது ஆச்சிரமத்திற்கு வெகு தொலைவில் மக்கள் வாழ்ந்து வந்தனர். அம்மக்களில் பலர் அந்த ஞானியின் ஆச்சிரமத்திற்கு வந்து தங்கியிருந்து வழிபாடுகள் செய்வது வழக்கம். அந்த ஞானி மீது அளவில்லாத நம்பிக்கை உடையவன் கந்தசாமி. அவன் தனது மனைவியுடனும் மகள் சித்திராவுடனும் அந்த ஞானியின் ஆச்சிரமத்திற்கு வந்து தங்கிச் செல்வது வழக்கம். அப்படியான வேளைகளில் சித்திரா ஞானியுடன் ஆச்சிரமத்தில் பல நாட்கள் தங்கியிருந்து அவருக்குச் சேவைகள் செய்வாள்''

''அப்படியான நாட்களில் ஞானிக்குச் செய்யும் சேவைகளினால் ஞானிக்கு அவளைப் பிடித்திருந்தது. அவள் மூலமாக வாசுதேவனுக்குக் கெட்ட பெயரை உண்டாக்க ஞானி விரும்பினார்''.

“ஒரு நாள் சித்திரா தனது பெற்றோருடன் வாசுதேவனின் ஆச்சிரமத்திற்கு வந்தாள். அவளது தந்தையான கந்தசாமி தனது மகள் தீராத வியாதியால் பீடிக்கப்பட்டிருப்பதாகவும், அதைத் தீர்த்து வைக்கும்படியும் வாசுதேவனை வேண்டினான்”.

“அன்பரே, நான் வியாதிகளைத் தீர்க்கும் வைத்தியன் அல்லன். நான் ஞானியும் அல்லன். எனது பாவங்களைத் தீர்ப்பதற்காக இந்த மரத்தின் கீழ் இருந்து சிவனின் நாமங்களை உச்சரித்துக் கொண்டிருக்கிறேன். நீர் யாராவது ஒரு வைத்தியரை நாடும்” என்றான்.

“சுவாமி, வைத்தியர்கள் எல்லோரும் கைவிட்டுவிட்டார்கள். அதனால் ஊரூராகச் சென்று ஆலய தரிசனம் செய்து வருகிறோம். இந்த ஆச்சிரமத்தில் தங்க அனுமதித்தல் வேண்டும்” என்றான் கந்தசாமி”.

“இங்கு அடியார்கள் தங்குவதில்லை. எனவே மரத்தின் கீழ் வீற்றிருக்கும் சிவலிங்கத்தைத் தரிசித்துவிட்டுச் செல்லுங்கள்” என்றான் வாசுதேவன்”.

“அப்போது சித்திரா வாசுதேவனின் முன் வந்தாள். அவளை வாசுதேவன் ஒருமுறை பார்த்தான். பார்த்தவுடனேயே மனதை உலுப்பும் ஓர் அழகு அவளின் உடலில் குடிகொண்டிருந்தது. அவளது தோற்றத்தையும், அலங்காரத்தையும் பார்த்தால் அவளுக்கு எந்த நோயும் உள்ளதாகத் தெரியவில்லை. அவர்கள் ஏதோ

தீயநோக்கத்துடன் வந்திருக்கிறார்கள் என்று வாசுதேவன் உணர்ந்து கொண்டான்''.

''சுவாமி, நீங்கள் பெரிய ஞானியென்று ஊரில் பேசிக்கொள்கிறார்கள். நீங்கள் மனதுவைத்தால் எனது மகளின் நோய் நீங்கிவிடும்'' என்றவாறு வாசுதேவனின் பாதங்களைத் தனது இரு கைகளாலும் பற்றிப் பிடித்து அழுதான் கந்தசாமி''.

''எல்லாம் இறைவன் செயல். தன்னை வென்று மனந்தெளிந்தவனுக்குக் குளிர் வெப்பங்களிலும், இன்ப துன்பங்களிலும், அங்ஙனமே புகழ்ச்சி இகழ்ச்சியிலும் இறைவனின் தரிசனம் நிலைத்திருக்கும் என்பது அவனுக்குத் தெரியும். அதனால் வாசுதேவன் அவர்களை அங்கு தங்க அனுமதித்தான். அப்பொழுது கந்தசாமி சொன்னான்; ''சுவாமி, நானும் மனைவியும், இவ்வூரில் உள்ள சிவாலயங்களுக்குச் சென்று வருகிறோம். சித்திரா நோய் தீரும் வரை உங்களது ஆச்சிரமத்தில் இருக்கட்டும்'' என்றான்.

''வாசுதேவனுக்கு யாவும் புரிந்தது. உலகில் படைக்கப்பட்டவை யாவும் சிறிது காலத்திற்குத்தான் மனிதர்களுக்குச் சொந்தமானவை. பின் அவை அவர்களை விட்டு நீங்கிவிடும். அவை யாவும் நிரந்தரமில்லாதவை. இறைவன் ஒருவன் தான் நிரந்தரமானவன். என்றும் ஆன்மாக்களோடு கூட இருப்பவன். பெண்ணையும் பொன்னையும் துறப்பவன் தான் சந்யாசி. துறவிகள் பெண்களது உருவப் படத்தைக் கூடப்பார்க்கக்கூடாது என்று சொல்வார்கள். துறவிகள் என்று சொன்ன பின் பெண்ணைப் பார்த்து ரசிப்பவன்

மனிதனாகிவிடுவான். காமம் என்ற மாயை அவனால் பற்றிப்பிடித்துவிடும்'' என்று வாசுதேவனுக்குத் தெரியும்''.

''அநித்தியத்திலிருந்து நித்தியத்தைப் பிரித்தறியக்கூடிய விவேகமும், உலக ஆசைகளில் இருந்து விடுபட்ட வைராக்கியமும், இறைவனிடத்தில் முதிர்ந்த பக்தியும் உடையவனாக எவன் இருக்கிறானோ அவன் பெண்களுடன் பயமில்லாமல் பழகலாம்'' என்று வாசுதேவன் அறிந்திருந்தான்.''

''அன்று இரவு நடுச்சாமம் கடந்துவிட்டது. தனது ஆச்சிரமத்தைச் சித்திராவுக்குக் கொடுத்துவிட்டு வாசுதேவன் ஆச்சிரமத்திற்கு வெகு தூரத்தில் நின்ற மரநிழலில் வீற்றிருந்த சிவலிங்கத்தின் அருகில் படுத்திருந்தான்.

''அப்பொழுது பலமாக யாரோ அலறும் சப்தம் கேட்டது. அந்தச்சப்தம் ஆச்சிரமத்துள் இருந்து வந்தது. வாசுதேவன் ஆச்சிரமத்திற்கு வெளியே நின்று ''சித்திரா'' என அழைத்தான். ''உள்ளே வாருங்கள் எனது உடைக்குள் பாம்பு சென்றுவிட்டது'' என்றாள் சித்திரா''.

''வாசுதேவன் உள்ளே சென்றான். சித்திரா தனது உடைகள் முழுவதையும் களைந்துவிட்டு நிர்வாணமாக நின்றாள். அவனைக் கண்டதும் அலறியபடி ஓடிவந்து அவனைக் கட்டிப்பிடித்தாள்''.

''வாசுதேவன் சமாதிநிலையடைந்தான். அவனுக்கு எதுவும் புரியவில்லை; எதுவும் விளங்கவில்லை. நின்றபடியே கல்லானான். சித்திராவுக்கு அதிர்ச்சியாக இருந்தது.

அவள் தனது கைகளை எடுத்தாள். வாசுதேவன் வேரற்ற மரத்தைப் போல நிலத்தில் சாய்ந்தான்''

''மன்னா, ஞான விக்ஞானத்தில் திருப்தியடைந்த, மனம் சலியாத, புலன்களை வென்ற கல்மண் பொன்களைச் சமமாகக் கருதுகின்ற யோகியானவன், தனக்கு ஆபத்து வரும் வேளைகளில் சமாதிநிலை அடைந்து விடுவான். இவன் நல்லெண்ண முடையவர், நண்பர், பகைவர், உதாசீனர், ஒதுங்கியிருப்போர், வெறுப்பானவர், சுற்றத்தவர், எதிரிகள், பாபிகள் ஆகியவர்களிடத்து ஒரே மனதுடையவனாகவே பழகுவான்''.

''சாஸ்திர ஆராய்ச்சியால் வரும் அறிவு ''ஞானம்'' எனப்படும். அந்தறிவு வளர்ந்து முதிர்ந்தால் அதற்கு விஞ்ஞானம் என்று பெயர். மற்றெல்லாம் மாற்றமடையும் போது எது மாறாதிருக்கின்றதோ அதை ஞானவிக்ஞானம் என்று பெரியவர்கள் கூறுவார்கள். இந்த நிலையைத் தான் வாசுதேவன் அடைந்தான்''.

''சந்திக்கக்கூடாத மிகவும் மோசமான சம்பவங்கள் நடைபெறும் இடங்களுக்கு நீ தற்செயலாகச் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டால், அப்போது இறைவனையும் அழைத்துச் செல். உனக்கு நடக்கப்போகும் தீமைகள் அனைத்தையும் இறைவன் நீக்குவார். அவரது அருள் எந்தத் தீய செயல்களையும் அழித்து, அதிலிருந்து வரும் பாவம் பழிகளையும் போக்கி உன்னைக் காப்பாற்றும். அத்துடன் கெட்டகாரியங்களை நீ நினைக்காமலும், செய்யாமலும்,

பார்க்காமலும், செய்யும்’’ என்று வாசுதேவனின் குரு அவனுக்குக் கூறியிருந்தார். அதன்படிதான் அவன் சித்திராவைக் கண்டதும் சிவனை நினைத்தான்’’.

‘‘சித்திராவின் வசப்பட்ட உடல் கல்லானது. ஞானியார் அணைக்கும் போது உண்டான இன்ப சுகம் அன்று தீயாக எரிந்தது. ஞானியும் சீடர்கள் சிலரும் அங்கு வந்தனர். அதற்குள் சித்திரா தனது உடைகளை அணிந்துவிட்டாள்’’.

‘‘ஞானி பலமாகச் சிரித்தார்; ‘‘சந்யாசிபோல வேடமிட்டுப் பெண்ணோடு சல்லாபிக்கும் வாசுதேவனை இன்று தான்கையும் மெய்யுமாகப் பிடித்தோம்’’ என்றார்’’.

‘‘சித்திரா பலமாகக் குழறினாள்; ‘‘இல்லை, இல்லை. நான் தான் இந்த ஞானியின் பேச்சைக் கேட்டு தீய செயலில் ஈடுபட்டேன். வாசுதேவன் உண்மையான சுவாமி’’ என்றாள்’’

‘‘மன்னா, இதிகாச புராணங்களை எடுத்து நோக்கினால் பல முனிவர்கள் பெண்களின் மீது கொண்ட ஆசையால் தமது தவபலம் முழுவதையும் இழந்துள்ளனர். அதுபோல பல மன்னர்கள் பெண்கள் மீது கொண்ட மோகத்தால் தமது நாடுகளை இழந்துள்ளனர். பெண் தான் மாயை. அவள் தான் மனிதர்களுக்குப் பிறப்பையும் துன்பங்களையும் கொடுப்பவள்’’

‘‘யோகியானவன் தனது உள்ளத்தையும் உடலையும் அடக்கி, ஆசைகளை அகற்றித் தனக்கென எந்தப்

பொருளையும் வைத்திராது எவ்வேளையிலும் மனதை ஒடுக்கியவனாக இருத்தல் வேண்டும்''

''உள்ளம் அமைதி பெற்று, அச்சத்தை அகற்றி, பிரமச்சாரிய விரதம் காத்து, மனதை அடக்கி சித்தத்தை இறைவன் பால் வைத்து, இறைவனைக் குறியாகக் கொண்டு யோகத்தில் அமர்ந்திருத்தல் வேண்டும். இப்படியானவன் இறைவனின் அருள் பெற்று முத்தியிலே முற்றுப்பெறும் சாந்தியைப் பெறுகிறான். இப்படியானவனின் மனது ஆன்மாவில் நிலைத்திருக்கும். இதனால் அவன் யோகத்தில் உறுதி பெறுவான். இவனது மனம் காற்றில்லாத இடத்தில் வைத்த தீபம் போல ஆட்டம் அசைவுகள் எதுவுமின்றி இருக்கும். இங்ஙனம் மனதை ஆன்மாவில் முழுமையாக நிலைக்கச் செய்து பாபம் நீங்கப்பெற்றவன் சிவ ஞானத்தில் பிறக்கும் பேரானந்தத்தைத் தினமும் அனுபவிப்பான். இது மாயை அற்ற நிலையாகும்''.

''மேற்சொன்னவாறு வாழ்வதாக நடித்த ஒருவரின் ஞானியின் கதையைக் கூறுகிறேன் கேள்''.

''ஓர் இடைச்சி, ஆற்றுக்கு அக்கரையில் ஆச்சிரமம் அமைத்துத் தனது சீடர்களோடு தவம் செய்துகொண்டிருந்த சந்யாசிக்கு பால் கொண்டு சென்று கொடுத்து வந்தாள். அது வளமான ஊர். மாதம் மும்மாரி பொழியும். அதனால் அடிக்கடி ஆற்றில் நீர் கரைபுரண்டோடும். அப்படி ஓடும் வேளைகளில் ஓடம் செலுத்துபவர்கள் ஓடம் செலுத்த மாட்டார்கள். ஆற்றின் வேகம் குறைந்த பின்பு தான்

ஓடம் செலுத்துவார்கள். இதனால் அந்த இடைச்சி சந்யாசிக்குப் பால் கொடுப்பதில் தடங்கலேற்படும். இதை உணராத அச்சந்யாசி அந்த இடைச்சியைக் கண்டிப்பார். அதற்கு அவள் சொல்வாள்; "சுவாமி, நான் அதிகாலையில் ஆற்றங்கரைக்கு வந்துவிடுவேன். ஆறு அமைதியாக இருந்தால் தான் ஓடக்காரன் ஓடம் செலுத்துவான். சிலசமயங்களில் மாலை நேரம் வரை ஆறு கரைபுரண்டோடும். இதனால் தான் நான் உங்களுக்கு நேரத்திற்குப் பால் கொண்டு வந்து தரமுடியவில்லை" என்றாள்".

"முனிவர் சிரித்தார். பின்பு சொன்னார்; "பெண்ணே பகவான் நாமத்தைச் சொல்லி வாழ்க்கை என்ற துன்பமான சமுத்திரத்தையே மக்கள் கடந்து விடுகிறார்கள். உன்னால் பகவானின் நாமத்தைச் சொல்லிக்கொண்டு இந்தச் சிறு ஆற்றைக் கடக்க முடியாதா..? என்று கேட்டார்".

"அந்தப் பெண் திகைத்துப் போனாள்; "பகவானின் நாமத்தைக் கூறிக்கொண்டு நீரின் மேல்நடந்து செல்லலாமா?" என்று ஆச்சரியத்துடன் கேட்டாள்".

"அதன் பின் அந்தச் சந்யாசிக்குத் தினமும் அதிகாலை வேளையிலேயே பால் கிடைத்து வந்தது"

"ஒரு நாள் மழை பலமாகப் பெய்தது. அந்த மழை அடைத்து மூன்று தினங்கள் பெய்தது. ஆனால் இடைச்சி அந்தப் பெருமழை பெய்த நாட்களிலும் குறித்த நேரத்திற்குப் பால் கொண்டுவந்து கொடுத்தாள். இதை அறிந்த அந்தச் சந்யாசி, அந்த இடைச்சியை அழைத்து; "நீ

மழைகாலங்களிற்கூடத் தாமதமாகி வருவதில்லை. இப்பொழுது ஓடக்காரன் மழை காலத்திலும் உரிய நேரத்திற்கு ஓடம் செலுத்துகின்றானா?'' என்று கேட்டார்''.

''சுவாமி, தாங்கள் முன்பு எனக்குக் கூறியதைச் செய்கிறேன். ஆற்றங்கரைக்கு வந்து பகவானின் நாமத்தைக் கூறிக்கொண்டு ஆற்றைத் தாண்டி வருகிறேன். இப்பொழுது நான் ஓடத்திற்காகக் காத்திருப்பதில்லை'' என்றாள்''.

இடைச்சியைச் சந்யாசி ஆச்சரியத்துடன் பார்த்தார். அவரால் அவள் சொல்வதை நம்பமுடியவில்லை. ''சரி நீ எப்படி ஆற்றைத் தாண்டி வருகிறாய் என்பதை எனக்குக் காட்டு'' என்றார்''.

''இருவரும் ஆற்றங்கரைக்கு வந்தனர். இடைச்சி கண்களை மூடியவாறு பகவானின் நாமத்தை உச்சரித்துக்கொண்டு ஆற்றில் இறங்கி நடந்தாள். சந்யாசியும் பகவானின் நாமத்தை உச்சரித்தவாறு ஆற்றில் இறங்கி நடந்தார். அவள் அக்கரையை அடைந்த பின் ஆற்றைத் திரும்பிப் பார்த்தாள். சந்யாசி நடக்கமுடியாமல் கஷ்ரப்படுவதைக்கண்டு, ''சுவாமி பகவான் நாமத்தைச் சொல்லும் நீங்கள் ஏன் வேட்டியைத் தூக்கிப்பிடித்திருக்கிறீர்கள். தங்களுக்குப் பகவான் மீது பூரணமான நம்பிக்கை இல்லை. அதனால் தான் தடுமாறுகிறீர்கள்'' என்றாள். இது இராமகிருஸ்ணபரமகம்சர் என்ற மகான் கூறிய கதை. இக்கதை உலகில் வாழும் எல்லா மக்களுக்கும் பொருந்தும்''

“கோயில்களில் இலட்சக்கணக்கான ரூபாயைச் செலவு செய்து பூசைகள் செய்கிறார்கள். தினமும் பலமணி நேரம் பிரார்த்திக்கிறார்கள்; பகவானின் நாமத்தை உச்சரிக்கிறார்கள். இவற்றைப் பூரணமான பக்தியுடன் செய்தால் அவர்கள் துன்பமடைய வேண்டிய நிலை உண்டாகாது. இறைவன் தான் கதி என்று முழுமனதுடன் எண்ணுபவர்களுக்குத் தான் மாயை அகலும்”.

“மன்னா, பாரதக் கதையை எடுத்துப்பார். சபையின் நடுவே திரௌபதைக்கு துயிலுரியப்படுகிறது. திரௌபதை கடைசி வரையும் தனது சேலையை பிடித்துக்கொண்டு சபையோரை நோக்கிக் கதறுகிறாள். யாரும் உதவவில்லை. இனிக் கடவுளே தஞ்சமென நினைத்துக் கைகளை சிரசின் மீது வைத்து; “கிருஷ்ணா, இந்த அபலையைக் காப்பாற்று” என்று தொழுகிறாள். பாரம் முழுவதையும் இறைவனிடம் கொடுத்துவிட்டு சும்மாய் இருந்தால் அப்பாரங்களை இறைவன் சுமப்பான் என்பதைத் திரௌபதையின் செயல் உணர்த்துகிறது”.

“யார் இறைவனை எல்லாவற்றிலும், எல்லாவற்றையும் இறைவனிடத்திலும் காண்கின்றானோ அவனை எச்சந்தர்ப்பத்திலும் இறைவன் காப்பாற்றுவான்”

“இந்த வகையில் நான் சோதிடத்தைப் பற்றியும் உனக்குக் கூறுதல் வேண்டும். சோதிடம் உண்மையானது. ஆனால் மாயையின் வசப்பட்டது. மாயையின் வசப்பட்ட

ஆன்மாவுக்கு அது பயனளிக்காத நம்பிக்கையாக வாழ்நாள் பூராகவும் இருக்கும்''.

''மன்னா, நீ திருகோண நட்சத்திரத்தில் பிறந்தவன். உனது ராசி மகரம். இப்பொழுது உனக்கு அட்டமத்துச் சனி நீங்கியுள்ளது. ஆசைகொள்ளாது நீதியாக வாழ்ந்து தர்மம் செய்பவனைக் கிரகங்கள் பெரிதாக வருத்தாது. நீ அட்டமத்துச் சனி நடந்த காலத்திலும் போர்களில் வெற்றியடைந்தாய். அதற்குக் காரணம் நீ தர்மமான முறையில் நடந்து கொண்டதுதான்''.

''சென்ற மாதம் அட்டமத்துச் சனி நீங்கிவிட்டதென்று நீ மகிழ்ச்சியடைய முடியாது. ஏனெனில் வியாழபகவான் இன்னும் மூன்று மாத காலத்திற்கு ஜென்மத்திலேயே இருப்பார். இது நல்லதல்ல. கிரகங்கள் மாறுவது போல வக்கிரமடைவதுமுண்டு. வக்கிரமடைதல் என்பது திரும்பவும் இருந்த இடத்திற்கு வருதல். வியாழன் இரண்டாம் இடத்திற்கு வந்து இரண்டு மாத காலத்தின் பின் சனிபகவான் வக்கிரமடைந்து மீண்டும் ஆறு மாதகாலத்திற்கு அட்டமத்திற்கு வருகிறார். இதனால் மீண்டும் உனக்கு அட்டமத்துச் சனியால் துன்பம் உண்டாகும்''.

''அதன் பின் இராகுபகவான் பதினொராம் இடத்திற்கும், கேதுபகவான் ஐந்தாம் இடத்திற்கும் வந்து ஒருவருட காலம் இருப்பார். இக்காலமும் உனக்கு நல்லதல்ல. இதனால் அட்டமத்துச்சனி விலகியபோதும் ஏனைய கிரகங்களால் துன்பமுண்டு''.

“நவக்கிரகங்கள் யாவும் ஒருவருக்கு நன்மை செய்வதற்காகவோ, தீமை செய்வதற்காகவோ ஒன்றுபட்டதில்லை. ஒரு கிரகம் நன்மை செய்யும் போது மறு கிரகங்கள் தீடைசெய்யும். இல்லாவிட்டால் தடைகளைத் தரும். அதனால் மனிதனுக்குக் கிரகங்களால் நன்மைகளும் தீமைகளும் அடிக்கடி வரும். கடவுள் பக்தியுள்ளவர்களைக் கிரகங்களால் வருத்த முடியுமே தவிரக் கெடுக்க முடியாது. மனிதர்கள் கிரகங்கள் நல்ல இடத்தில் சஞ்சரிக்கும் போது தமக்கு நல்லவை நடைபெறும் என்ற மாயைக்குட்படாது தர்மமான முறையில் வாழ்வதன் மூலமே நன்மைகளைப் பெறலாமென நம்பவேண்டும்”.

“மன்னா, மனம் கட்டுப்படாது அலையும் தன்மை கொண்டது. எனினும் அதைக் கட்டுப்படுத்துவதற்குப் பயிற்சியும் வைராக்கியமும் உதவும். மனதை அடக்காதவன் இறைவனை அடையமாட்டான். மனதை அடக்கி இறைவனை அடைய முயல்பவனே இறைவனை அடைவான். குணங்களான மாயையை நீக்க முடியாது. யார் இறைவனைச் சரணடைகிறார்களோ அவர்கள் இந்தக் குணங்களாளான மாயையை நீக்குவார்கள்”

“மன்னா, மரணகாலத்தில் தனது குலதெய்வங்களை நினைத்துக்கொண்டு உடலைத்துறந்து யார் போகிறானோ அவன் அக்குல தெய்வத்தை அடைவான். அதுபோல இறுதிக்காலத்தில் எப்பொருளை எண்ணிக்கொண்டு ஒருவன் உடலை உகுக்கிறானோ, எப்பொழுதும் அப்பொருளை

விரும்புபவனாகிய அவன் அதையே அடைவான். அதனால் சர்வ காலமும் இறைவனை நினைத்துக்கொண்டே வாழ்பவன் மனத்தையும் புத்தியையும் இறைவனிடம் அர்ப்பணம் செய்வதால் தான் இறைவனை அடைகிறான்''.

''சுவாமி, பற்றுக்களால் நான் தினமும் துன்பப்பட்டுக்கொண்டே இருந்தேன். எனது மனைவியை விட்டுப் பிரியவே முடியவில்லை. அவள் எனது பலவீனத்தைப் பயன்படுத்தி என்னைத் தனது விருப்பிற்கேற்ப நடத்துவதாக நாட்டு மக்கள் எந்நாளும் குறைகூறுவதாக எனது ஒற்றர்கள் அடிக்கடி கூறுவார்கள். எனது மனைவியின் பேரழகு என்னை ஒரு போதும் சிந்திக்கவிடுவதில்லை. அவளது கண்களைக் கண்டால் நான் மெய்மறந்துவிடுவேன். அவள் என்னை அணைத்தால் நான் இவ் உலகையே மறந்துவிடுவேன். என்னை இறுக அணைத்து முத்தமிட்டாளானால் நான் என்னையே இழந்துவிடுவேன். அதன் பின் என்ன செய்கிறேன் என்று எனக்குத் தெரியாது. இதனால் செய்யக்கூடாத பல தீமைகளைச் செய்துவிட்டேன். அவளின் மேல் ஏற்பட்ட மோகத்தால் நீதி தவறிவிட்டேன். இப்போது அவற்றை எண்ணிப் பார்க்கையில் வெட்கமாகவும், வேதனையாகவும் இருக்கிறது. இத்தீமைகளுக்கெல்லாம் பரிகாரம் தேடவேண்டும்'' என்றான் மன்னன்.

''மன்னா, கவலை கொள்ளாதே. செய்தவை தவறு என்று உணர்ந்து கொள்பவன் இறைவனை நேசிக்கத் தொடங்குகிறான். மன்னா, முற்றும் உணர்ந்தவனை,

அனைத்தையும் ஆளுபவனை, அணுவிலும் நுண்மையானவனை, அனைத்தையும், தாங்குபவனை சிந்தனைக்கெட்டாத வடிவுடையோனை, கதிரவனைப் போன்று ஒளிர்பவனை, அஞ்ஞான இருளுக்கு அப்பாற்பட்டவனை, பக்தியோடும், உறுதியான மனத்தோடும். யோகபலத்தோடும் பிரார்த்திப்பவன் இறைவனின் அம்சங்களைப் பெற்றவனாவான். அவனைப் பற்றுக்கள் அணுகாது. மன்னா, பரிபக்குவ நிலையை அடைவது எப்படியென்று உனக்கு உபதேசித்துள்ளேன். அதன்படி நடந்து ஆத்ம ஈடேற்றம் பெறுவாயாக''. என்று வாழ்த்தினார் நமசிவாயகம் சுவாமியார்.

''சுவாமி, வேட்டையாடக் காட்டுக்கு வரும்போதெல்லாம் தங்களைச் சந்தித்து உரையாடுவேன். அதில் மிகுந்த அவசரமிருக்கும். வேட்டையாடுவதை இடையில் விட்டுவிட்டு நாட்டுக்குத் திரும்பிவிடுவேன். இம்முறை தங்களுடன் ஆற அமர இருந்து உரையாடியமையால் பல விஷயங்களைத் தெரிந்து கொண்டேன். வாழ்க்கை துன்பகரமானது; நிலையில்லாதது என்பதை புரிந்து கொண்டேன். காமவசப்பட்டமையால் அக்காமத்தைத் தீர்க்க முயன்றேனே தவிர நாட்டைப் பற்றிய நினைவு எனக்கு வரவில்லை. துயரத்துக்குரியவர் அல்லார் பொருட்டுத் துயரமடைந்தேன். ஞானிகளின் உபதேசங்களையும் கேட்காது அலட்சியப்படுத்தினேன். இறந்தவர்களுக்காகத் துன்பப்பட்டேன். ஆன்மாவுக்குரிய உடலில் இளமையும் யௌவனமும் நிலைத்திருக்கும் என்று நினைத்தேன். வாழ்க்கையில்

பேரின்பத்தைத் தருவது அழகிய பெண்களின் மொழியும், உடலும் என்று நினைத்தேன். இல்லாதவற்றிற்கு இருப்பு உண்டென்று நம்பினேன். இப்பொழுது தான் உண்மையான நிலையை அறிந்து கொண்டேன். நித்தியமானதாய், நாசமற்றதாய், அளப்பரியதாய் இருக்கும் ஆன்மா பெற்ற உடலங்கள் யாவும் அழியும் தன்மை உடையனவென்றும் தெரிந்து கொண்டேன்''.

''ஆன்மா ஒருபோதும் பிறப்பதில்லை, இறப்பதுமில்லை. அது இல்லாதிருந்து பிறகு பிறந்ததல்ல. ஆன்மா பிறவாதது, இறவாதது, தேயாதது, வளராதது. உடல் அழியுமிடத்தும் ஆன்மா அழிவதில்லை. அது பழைய உடல்களை விட்டுவிட்டுப் புதிய உடலைத்தேடிக்கொள்ளும் என்பதையும் தெரிந்து கொண்டேன். அதனால் நான் இதுவரை வாழ்ந்த வாழ்க்கையை விட்டு விட்டு நாட்டு மக்களின் நல்வாழ்வுக்காக வாழப்போகிறேன். அது எனது ஆன்மாஈடேற்றத்திற்கு உதவி புரியும்'' என்றான் மன்னன்.

''நல்லது மன்னா, உடல்கள் அனைத்திலும் உறைகின்ற ஆன்மா என்றும் வதைக்கப்படாதது. ஆகையால் உயிர்களின் பொருட்டு நீ வருந்தாது உனது கடமைகளைச் செய். யாரும் ஒரு கணப்பொழுதேனும் செயலாற்றாது இருந்ததில்லை. ஏனென்றால் பிரகிருதியில் இருந்து உதித்த குணங்களால் ஒவ்வோர் உயிரும் தன் வயமின்றிக் கர்மம் செய்விக்கப்படுகின்றது என்பதை உணர்ந்து கொண்டாய். இனி

நாட்டுக்குத் திரும்பி நல்லாட்சி செய்'' என்று வாழ்ந்தினார் நமசிவாய சுவாமியார்.



பின் மட்டையில் கே. வி. குணசேகரம் அவர்களின் படம் போடவும்.

(படம் குணா சேர் என்ற பெயரில் உள்ளது)